# மே – 18 தமிழின அழிப்பு நாள்

## வடக்கு மாகாண சபை பிரகடனம்


பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 28 வெள்ளிக்கிழமை 11.05.2018 | கதிர் 186


(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மே 11
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான மே - 18ஆம் திகதியைத் தமிழ் இன அழிப்பு நாளாகவும், தமிழ்த் தேசியத்தின் துக்க நாளாகவும் வடக்கு மாகாண சபை நேற்றுப் பிரகடனப்படுத்தியது.

வடக்கு மாகாண சபையின் 122ஆவது அமர்வு நேற்றுப் பேரவைச் செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி

பக்கம் 14 »

## கோட்டாவை கைது செய்ய முடியவில்லை

### ராஜித ஆதங்கம்

கொழும்பு, மே 11
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை கைதுசெய்ய முடியாமைக்கான காரணம் தனக்கும் தெரியவில்லையென அமைச்சரவை

பக்கம் 14 »

## தந்தையின் வான் மோதி ஐந்து வயது மகள் சாவு!

### வவுனியாவில் துயரம்



வவுனியா, மே 11
வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் பகுதியில் தந்தையின் 'ஹையஸ்' ரக வான் மோதி ஐந்து

பக்கம் 14 »

## சத்தியலிங்கம் குற்றமற்றவர்

### வடமாகாண சபை அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மே 11
வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குற்றமற்றவர் என வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு அவைத் தலைவர் சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது அவைத் தலைவர்

பக்கம் 03 »

# தமிழர் தீர்வை எட்டும்வரை நாட்டுக்கு மீட்சி கிடையாது

## நாடாளுமன்றில் சம்பந்தன் அறிவிப்பு



கொழும்பு, மே 11
**"வடக்கு, கிழக்கில் நிலவும் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நீண்ட காலமாக இழுபட்டுச் செல்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வை எட்டும்வரை நாட்டுக்கு மீட்சி இருக்காது.எனவே, இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சகலரும் ஒன்றுபடவேண்டும்."**

**- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்.**

பக்கம் 14 »

### இ வி து ரகசியம் அல்ல!

இம்முறை வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தலைவர் பதவியைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரும் பொட்டில்தான் தக்க வைத்துக் கொண்டது. அதுவும் திருவுளச் சீட்டு அதற்கு சார்பாக விழுந்தமையால் கிட்டியது 'சான்ஸ்'.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலிகாமம் தெற்குப் பிரதேச சபையை பங்காளிக்கட்சி

பக்கம் 03 »

## புதிய அரசமைப்பு விடயத்தில் தப்பிவிடமுடியாது ஜனாதிபதி

### சபையில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 11
புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் கடமையிலிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விலக முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைய ஜனாதிபதி செயற்பட வேண்டும்.இதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான முழு ஒத்து

பக்கம் 14 »

## சிறுவர் சேமிப்பு வட்டி மீதான வரி நீக்கம்

கொழும்பு, மே 11
சிறுவர் சேமிப்புக் கணக்குகளின் வட்டி மீது ஏப்ரல் முதலாம் திகதி முதல் அறவிடப்பட்டு வந்த 5 சதவீத வரியை

பக்கம் 03 »

## வடக்கு - கிழக்கில் 522 ஏக்கரை விடுவிக்க இராணுவத்துக்கு நிதி

கொழும்பு, மே 11
வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளில் 522 ஏக்கரிலிருந்து வெளியேறுவதற்கு இராணுவம் தீர்மானித்

பக்கம் 14 »

### வடக்கு கிழக்குக் காணி விடுவிப்பு;

## ஜனாதிபதியின் கூற்றை ஏற்க மறுத்தார் ஹக்கீம்

வடக்கு - கிழக்கில் 85 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்றை

பக்கம் 14 »

## 2 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் விலை மாறும்

### அமைச்சர் மங்கள தகவல்

கொழும்பு, மே 11
அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ள எரிபொருள் விலைச் சூத்திரத்தின் அடிப்படை

பக்கம் 14 »

## மண்ணெண்ணெய் விலை இரு மடங்காக எகிறியது!

### பெற்றோல் 20 ரூபா, டீசல் 9 ரூபா விலை உயர்வு



கொழும்பு, மே 11
பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்படவுள்ளது. இதன்படி மண்ணெண்ணெயின் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது.

அதன்படி 117 ரூபாவாக விருந்த ஒக்ரைன் 92 ரகப் பெற்றோல் 137 ரூபாவுக்கும், ஒக்ரைன் 95 ரகப் பெற்றோல் 20 ரூபா அதிகரிக்கப்பட்டு 148 ரூபாவுக்கும் விற்கப்படவுள்ளது.

இதேவேளை, 95 ரூபாவாகவிருந்த டீசல் 14 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 109 ரூபாவாகவும், 110 ரூபாவாக

பக்கம் 14 »

## இலங்கை - இந்திய உறவு மிகப் பலமடைந்துள்ளது

### தூதுவர் தரண் ஜித் சிங் தெரிவிப்பு

கொழும்பு, மே 11
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு மிகவும் பலமடைந்துள்ளது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரண் ஜித் சிங் தெரிவித்

பக்கம் 03 »

# சிறைச்சாலை ஊழல் குற்றச்சாட்டுக்கு எதிராக வவுனியா சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, மே 11

வவுனியா சிறைச்சாலையில் இடம்பெறும் ஊழல் குற்றச்சாட்டுக்கு எதிராக நேற்று வவுனியா சட்டத்தரணிகள் ஒரு மணித்தியாலம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் பணிப்பறக்கணிப்பு தொடர்பாக வவனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலம் தெரிவித்தவை வருமாறு:-



வவுனியா சிறைச்சாலையில் இடம்பெறும் அராஜகங்களை எதிர்த்து தாமாக குரல் கொடுக்க முடியாத விளக்கமறியல் கைதிகள் சார்பிலே சட்டத்தரணிகளான நாங்கள் அவர்களுடைய நிலைமைகளை வெளி உலக மக்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளோம்.

வவுனியாவில் சிறைச்சாலை உருவாக்கப்படும்போது வடபகுதியிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு வெளியேற முடியாத மக்களுக்கு உதவியாக இருக்கும் என்ற அடிப்படையிலே அது ஏற்படுத்தப்பட்டது.

ஒரு கைதி நீட்டி நிமிர்ந்து படுப்பதானால் ஒரு நாளைக்கு மூவாயிரம் ரூபா கொடுக்க வேண்டும். ஒரு தொலைபேசி அழைப்பை உள்ளிருந்து வெளியே எடுப்பதாக இருந்தால் சிறைக் காவலர்களுக்கு ஒரு நிமிடத்துக்கு நூறு ரூபா கொடுக்க வேண்டும்.

வவுனியா நீதிமன்றம் கஞ்சா, அபின் போன்ற போதைப் பொருள்கள் பாவணையில் இறுக்கமாக நிலையை கடைப் பிடிக்கின்றது. ஆனால் சிறைச்சாலையில் நீதிமன்றம் எதைத்தடுக்க நினைக்கின் றதோ அது தாராளமாகவே கிடைக்கின்றது.

ஏழைகள் துன்புறுத்தப்படுவதும், ஏழைகளுடைய பணம் வஞ்சிக்கப்படுவதும் ஏழைகளின் கஷ்டத்தில் ஒரு சிலர் பணம் சம்பாதிக்கின்றமையை நிறுத்தவேண்டும்.

பொதுமக்கள் மத்தியிலே நாங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். பொதுமக்கள் தொடர்பில் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் இன்றைய (நேற்று) பணிப்புறக்கணிப்பைமேற்கொண்டுள்ளோம்.

உடனடியாக இங்கு கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் மாற்றப்பட்டு புதிதாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சுதந்திரமாக பாரபட்சமற்ற ஒரு குழுவை அமைத்து இங்கு இடம்பெறுகின்ற அநீதிகளுக்கு சாட்சிகள் மூலம் ஒழுக்காற்று நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை செய்ய முடியாதுவிட்டால் விளக்கமறியல் சிறைச்சாலையை மூடிவிடவும். சிலருக்கு பணம் சம்பாதிப்பதற்காக சிறைச்சாலை இருக்கக்கூடாது. மக்களுடைய தேவைக்கே [illegible]றைச்சாலை.

சிறைச்சாலையில் இடம்பெறும் அநீதிகளை நாங்கள் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்வோம். ஒரு நிதிமன்றத்தில் தண்டம் விதிக்கப்பட்டு நிதிமன்ற சிறைக்கூடத்தில் வைக்கப்பட்ட ஒருவர் தனக்கு விதிக்கப்பட்ட தண்டத்தைச் செலுத்தி விரைவாக வெளியேறுவதானால், அங்குள்ள சிறைக் காவலருக்கு நூறு ரூபா வழங்க வேண்டும்.

நீதியின் மூக்கின் நுனியில் இந்த அநியாயம் நடைபெறுகின்றது. இவற்றை வெளிக் காட்டுவதற்காகவே இன்றைய (நேற்று) வெளிநடப்பை மேற்கொண்டுள்ளோம் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

(க-100)

# நீதித்துறையின் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளன ஆணைக்குழுக்கள்

கொழும்பு, மே 11

சமகால நல்லாட்சி அரசில் நீதித் துறையின் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டு ஆணைக்குழுக்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் திருமதி தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

நீதித்துறை திருத்தச் சட்டமூலம் கால விதிப்பு சட்டமூலம் தண்டனைச் சட்டக்கோவை திருத்தச் சட்டமூலம் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை திருத்தச் சட்ட மூலம் தொடர்பான நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



நீதி அமைச்சர் தலதா தெரிவிப்பு

இதுதொடர்பில் அவர் மேலம் தெரிவித்தவை வருமாறு:-

மக்களது பணம் தொடர்பில் அரசுக்கு பொறுப்பு உள்ளது. மக்கள் பணத்தை வீண்விரயம் செய்பவர்களுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்டும் உரிமை நாடாளுமன்றத்தை சார்ந்ததாகும். இன்று (நேற்றுமுன்தினம்) நிறைவேற்றப்பட்ட திருத்தங்கள் மூன்று நீதியரசர்கள் அடங்கிய மேல் நீதிமன்றங்களை அமைக்க வழிவகுக்கிறது.

எந்தவொரு தனிப்பட்ட நபர்களையும் இலக்குவைத்து விசேட உயர்நீதிமன்றத்தை அமைக்கும் நீதிமன்ற (திருத்த) சட்டமூலம் கொண்டுவரப்படவில்லை .

பத்தொன்பதாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அதனூடாக சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தமையினால் பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கூட மாற்றமுடியாத சூழல் காணப்படுகின்றது என்றும் அவர் குறிப் பிட்டார்.

# முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ் காலமானார்



வடமராட்சி, மே 11

முன்னாள் யாழ் அரச அதிபரான கே.கணேஷ் (வயது 72), கடந்த ஒரு வாரகாலம் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை காலமானார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2010 மார்ச் 13 ஆம் திகதி வரை அவர் யாழ் அரச அதிபராகக் கடமையாற்றியிருந்தார். அதற்கு முன்னர் வவுனியா அரச அதிபராகவும் அவர் பணி புரிந்தார்.

அவர் வடமராட்சி பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

(உ)

# வவுனியாவில் டெங்கு நுளம்பு ஒழிப்பு தீவிரம்

வவுனியாவில் அண்மைக் காலங்களில் பெய்த மழை காரணமாக டெங்கு நுளம்பு பெருக்கம் ஆரம்பமாகியுள்ளது.

இதையடுத்து வவுனியா நகரில் முன்னாயத்த நடவடிக்கையை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மலேரியா தடுப்பு இயக்கமும் இணைந்து மேற்கொண்டுள்ளன. அண்மையில் மாலை வேளையில் வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக நுளம்புக் குடம்பிகளில் டெங்கு பெருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் வைத்தியர் எஸ். லவனின் பணிப்புரையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க-100)





இலங்கை, இந்தியாவுக்கான போலந்து தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் ஸ்லோவாமீர் கோல்ட்ஷன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்காவைச் சந்தித்தார்.

இராணுவ தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கேர்ணல் ஸ்லாவோமீர், பாதுகாப்புப் படையின் இராஜ தந்திர சேவை அதிகாரியாவார்.

இந்தச்சந்திப்பின்போது, இலங்கையுடன் இருபக்க பாதுகாப்பு உடன்படிக்கைக்கு உதவுவதற்கு போலந்தின் உறுதிப்பாடு குறித்து மறுபரிசீலனை செய்யப்பட்டது.

# மின்னல் தாக்கி ஒருவர் பலி

கொழும்பு, மே 11

மின்னேரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்புறுயாய பகுதியில் மின்னல் தாக்கி நபரொருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

61 வயதான நபரே நீரிறைத்துக் கொண்டிருந்த வேளையில் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யர்ழ். இந்துக் கல்லூரி

# க.பொ.த [உ/த] 2020 இற்கான அனுமதி கோரல்

யாழ்ப்பாணம் மே 11


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் க.பொ.த (உ.த) 2020 கலைப் பிரிவு, பொறியியல் தொழில் நுட்பம் உயிர்முறைமைகள் தொழில் நுட்பம், ஆங்கில மொழி மூல வர்த்தகப் பிரிவுகளுக்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு அதிபர் சதா நிமலன் தெரிவித்துள்ளார்.

(இ)

# வடக்கு முன்னாள் அமைச்சர்கள் மீது சட்ட ரீதியாக விசாரணை நடக்கும்

## முதலமைச்சர் நேற்றுத் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 11

வடக்கு மாகாண அமைச்சரவையிலிருந்து பதவி விலகிய - பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் 4 பேர் மீதும் உள்ள குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாக விசாரித்து, சட்டரீதியாக தண்டனை வழங்குவதற்காக மேலும் ஒரு விசாரணையை நடத்துவதற்குப் பிரதம செயலாளரிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் 122ஆவது அமர்வு நேற்றுப் பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண முன்னாள் அமைச்சர்கள் 4 பேர் மீது விசாரணை நடத்த முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட மூவர் குழு விசாரணை நடத்தியது. அந்த விசாரணை குழுவின் அறிக்கை வெளியாகிய பின்னரும், அதில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன? என எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முதலமைச்சரிடம் வாய்மொழி மூல வினா ஒன்றை எழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்வி மற்றும் விவசாய அமைச்சுக்களின் செயலாளர்களை மாற்றம் செய்யாமல் நடத்தப்படும் விசாரணை பலனளிக்காது என்பதாலேயே நாம் அமைதியாக இருந்தோம். இப்போது அந்த அமைச்சுக்கள் இரண்டினதும் செயலாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர். சட்டரீதியாக விசாரித்து குற்றவாளிகள் என்றால் சட்ட ரீதியாகத் தண்டனை வழங்குவதற்கான விசாரணைக் குழு ஒன்றுக்குப் பிரதம செயலாளரிடம் பரிந்துரை செய்துள்ளேன் என்று முதலமைச்சர் பதிலளித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்து கூறிய எதிர்க்கட்சித் தலைவர், 'ஆட தெரியாதவன் மேடை சரியில்லை என்றானாம்' என்று கூறி அமர்ந்தார். (ஐ-7)

# இலஞ்சம் பெறுவதிலேயே வடக்குப் பொலிஸார் குறி

## சத்தியலிங்கம் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் வீதி ஒழுங்கு விதிமுறைகள் உரிய முறையில் காணப்படுவதில்லை. அதேபோன்றே அந்த ஒழுங்கு விதிமுறைகளும் சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அவ்வாறு இருக்கையில் இதனைக் கட்டுப்படுத்தும் அல்லது கண்காணிக்கும் பொலிஸார் இலஞ்சத்தைப் பெறுவதிலேயே குறியாக உள்ளனர்.

- இவ்வாறு குற்றம்சாட்டினார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் உறுப்பினருமான ப.சத்தியலிங்கம்.

இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு உரிய பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின்போது வடக்கில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே சத்தியலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் அதிகரித்திருக்கும் வீதி விபத்துக்களுக்கு வீதி ஒழுங்கு விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்காமையே காரணமாகும். அதிலும் அதிவேகமாக வாகனம் ஓட்டுதல் மற்றும் தொலைபேசியில் கதைத்துக்கொண்ட வாகனங்களைச் செலுத்துதல் போன்றனவே பிரதான காரணங்களாக உள்ளன.

இதில் குறிப்பாக அரசதிணைக்களங்களின் வாகனங்கள் வேகக் கட்டுப்பாடுகளே இல்லாது அதிவேகமாகப் பயணிக்கின்றன. அதேபோன்றுதான் ஏனைய பல வாகனங்களையும் ஓட்டுகின்றவர்கள் தொலைபேசியில் உரையாடிக்கொண்டுப் பயணிக்கின்றனர். இதனாலேயே விபத்துக்களும் ஏற்பட்டு உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

ரயில் கடவைகள் பாதுகாப்பானதாக மாற்றியமைக்கப் படவேண்டும். வீதிகளில் சமிக்ஞை விளக்குகள் சீர்செய்யப்படவேண்டும். நடைபாதை வியாபாரங்கள் தடை செய்யப்படவேண்டும். இவை எல்லாவற்றையும் சீர்செய்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வீதி ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். - என்றார். (ஐ-7)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான புளொட்டுக்கு வழங்கியிருந்தது.

தலைவர் தெரிவின்போது ஒருபுறம் புளொட் வேட்பாளர் தர்ஷன். மறுபுறம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதிருப்தி வேட்பாளர் பிரகாஷ். இவர் முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் இந்தச் சபையின் தலைவராக இருந்தவர்.

தலைவர் தெரிவுக்கான இறுதி வாக்கெடுப்பில் இருவருக்கும் சமமான ஆதரவு கிட்டியதால் திருவுளச் சீட்டு போடப்பட்டது. கூட்டமைப்பின் தலைமையால் அறிவிக்கப்பட்ட தர்ஷனுக்கு சார்பாக அது அமைந்தது. அவர் தலைவரானார்.

அத்துடன் விடயம் முடிந்து விடவில்லை. - அதுதான் செய்தி.

தங்களுக்கு எதிராக அதிருப்தி வேட்பாளராகப் போட்டியிட்ட பிரகாஷ் குறித்து இலங்கைத் தமிழரசுக்கட்சி என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது எனக் கேட்டு புளொட் தரப்பு குடூறிக் கொண்டிருந்தது. அந்தச் சீற்றத்துக்கு இப்போது பதில் கிடைத்துள்ளது.

தங்களது உத்தியோகபூர்வத் தலைவர் வேட்பாளருக்கு எதிராக, மாற்றுக் கட்சித் தரப்புகளுடன் சேர்ந்து - கட்சி முடிவுக்கு மாறாக - போட்டியிட்டமைக்காக மேற்படி உள்ளூராட்சி உறுப்பினர் பதவியிலிருந்து உங்களை ஏன் நீக்கக்கூடாதுஎன்பதற்கு ஏதேனும் காரணங்கள் இருப்பின் அடுத்த 14 நாள்களுக்குள் அவற்றை எழுத்தில் தாருங்கள் என்று தெரிவித்து, இலங்கைத்தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் கடந்த 4 ஆம் திகதியிட்டு பிரகாஷுக்கு ஒரு கடிதம் எழுதி யுள்ளார்.

அதாவது, ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

இந்த ஒழுக்காற்று நடவடிக்கைக் கடிதத்திலேயே பல ஓட்டைகள் இருப்பதாக விடயமறிந்தவட்டாரங்கள்கூறுகின்றன.

1. தர்ஷனை மேற்படி சபைக்கான தலைவராகத் தெரிவு செய்யும் முடிவைத் தமிழரசுக் கட்சி எடுத்ததாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கமோ, தலைவர் மாவை சேனாதிராஜாவோ அல்லது துணைச் செயலாளரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனோ எடுத்த அத்தகைய முடிவு கட்சியின் முடிவாகுமா? பிரதேச சபைத் தலைவர் இன்னார்தான் என்பதைத் தமிழரசுக் கட்சியின் சட்ட அங்கீகாரம் பெற்ற எந்த சபை எடுத்தது என்பதில் தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. அத்தகைய தீர்மானம் கூட சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வமாக எழுத்தில் அறிவிக்கப்பட்டதா என்ற கேள்வியும் உள்ளது. சட்ட ரீதியான அதிகாரமுள்ள கட்சியின் கட்டமைப்பு எடுக்காத முடிவை - சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வமாக எழுத்தில் அறிவிக்கப்படாத தீர்மானத்தை - ஓர் உறுப்பினர்பின்பற்றவில்லைஎன்பதைக் காரணமாகக் காட்டி அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியுமா?

2. கட்சித் தீர்மானத்தை மீறிய குற்றம் ஒன்றுக்காக சம்பந்தப்பட்ட உறுப்பினரை கட்சியிலிருந்த இடைநிறுத்துவது அல்லது நீக்குவது என்ற மாதிரியான தண்டனையைத்தான் இது விடயத்தில் ஒழுக் காற்று நடவடிக்கை மூலம் கட்சி எடுக்க முடியும். அப்படி அவர் கட்சியிலிருந்து நீக்கப் பட்டார் என்ற தீர்மானம் நடை முறைக்கு வந்த பின்னர், அதனடிப்படையில் கட்சியில் இல்லாத அந்த நபர், கட்சியின் சார்பில் உள்ளூராட்சி உறுப்பினராக இருக்க முடியாது என்று தேர்தல் அதிகாரத் தரப்புக்கு அறிவித்து, அதனடிப்படையில் அவரை உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றுவது வேறு.

ஆனால், இங்கு பிரகாஷுக்கு அனுப்பப்பட்ட ஒழுக் காற்று நடவடிக்கை தொடர்பான கடிதத்தில், அவருக்கு எதிராகக் கட்சியிலிருந்து இடைநிறுத்தல் அல்லது நீக்கல் தொடர்பான நடவடிக்கை பற்றி ஏதும் பேசப்படவில்லை. மாறாக உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியில் இருந்து ஏன் உங்களை நீக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படிதான் அவர் கேட்கப்பட்டுள்ளார்.

- இப்படி இந்த விளக்கம் கோரும் கடிதத்தில் பல சட்ட ஓட்டைகள் இருக்கின்றன என்கின்றன சட்ட வட்டாரங்கள்.

என்ன நடக்கப் போகின்றது என்பதைப் பொறுத்து இருந்து பார்போமே!

எது, எப்படிஎன்றாலும் உள்ளூராட்சிக்கு சபை உறுப்பினர்கள் மீதான கட்சிகளின் கிடுக்குப்பிடி தொடர்பில் இந்தப் பிணக்கு - அதாவது இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமை எதிர் பிரகாஷ் சர்ச்சை - ஓர் 'அஸிட் டெஸ்ட்' என்று சொன்னால் அது மிகையாகாது.

-மின்னல்-

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார். இலங்கையிலுள்ள பிரதான ஊடகங்களின் ஊடகவியலாளர்களை நேற்றுமுன்தினம் இரவு சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையும் இந்தியாவும் பழைமை வாய்ந்த உறவுகளை அரசியல், பொருளாதார, கலாசார ரீதியில் கொண்டுள்ளன. சமகாலத்தில் இந்த உறவு பலம் வாய்ந்தாக மாறியுள்ளது.

இதேவேளை, இலங்கை மற்றும் இந்தியாவில் 60 வீதமான சனத்தொகை 25 வயதுக்குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றது. இது இரு நாடுகளினதும் எதிர்கால அபிவிருத்திக்கு நம்பிக்கையளிக்கும் விடயமாக வுள்ளது. - என்றார். (ஐ)

### சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்குவதாக அரசு அறிவித்துள்ளது. இந்தத் தகவலை நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது கீச்சகத்தில் வெளியிட்டுள்ளார்.

18 வயதுக்குட்பட்ட சிறுவர் சேமிப்புக் கணக்குகள் தவிர்ந்த சேமிப்புக் கணக்குகள் மீது வழங்கப்படும் வங்கி வட்டிகளுக்கு 5 சதவீத வரி அறவிடப்பட்டது. எனினும் அரசால் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி நடைமுறைக்கு வந்த புதிய இறைவரிச் சட்டத்துக்கு அமைவாக சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டி மீதும் 5 சதவீத வட்டி அரசால் அறவிடப்பட்டது.

அரசின் இந்த நடைமுறையைக் கண்டித்த நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் சிறுவர் சேமிப்புக் கணக்குகளிலிருந்து கிடைக்கும் வட்டி மீதான வரியை நீக்க வேண்டும்எனக்கோரியிருந்தது.

இந்த நிலையில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டிமீது அறவிடப்படும் வரியை நீக்கியுள்ளதாக நிதி அமைச்சு நேற்று அறிவித்தது. (ஐ)

### சத்தியலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை அடுத்து முதலமைச்சரால் விசாரணைக் குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் அமைச்சர்கள் இருவர் குற்றமிழைத்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மற்றைய இரண்டு அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன என முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து அமைச்சர்கள் நான்கு பேரும் மாற்றப்பட்டனர். இதன் பின்னர் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்தகைய விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படாதமையால் தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுவதாகவும், தன் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து முதலமைச்சர் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் கடந்த அமர்வில் ப. சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்திருந்தார்.

முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கத்தின் மேற்படி கோரிக்கைக்கு நேற்றைய அமர்வில் பதிலளித்த முதலமைச்சர், அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தும் அவை நிரூபிக்கப்படவில்லை, யார் மீதும் குற்றஞ்சாட்ட வேண்டுமென்றோ யாரையும் பதவி நீக்கவேண்டுமென்றோ நான் எண்ணியதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து இந்தச் சபையில் முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லை என்பதால் தொடர் விசாரணை நடவடிக்கைகள் எவையும் தேவையில்லை என்று குறிப்பிட்ட அவைத் தலைவர் சிவஞானம், சத்தியலிங்கம் குற்றமற்றவர். - என்றார். (ஐ-7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## எகிறும் எரிபொருள்களின் விலை

**நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான கட்டத்தில் இருக்கின்றமை குறித்து இப்பத்தியில் சில தினங்களுக்கு முன் பிரஸ்தாபித்திருந்தோம்.**

**2001 ஆம் ஆண்டில் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகளின் கரும்புலித்தாக்குதலை அடுத்து நாட்டின் பொருளாதாரம் பெருவீழ்ச்சி கண்டு, மோசமான கட்டத்தை எட்டியது.**

**அது போன்ற ஒரு நிலைமை – மிக மந்தமான – மோசமான – பொருளாதார வளர்ச்சி வீதம் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்டிக் குறிப்பிட்டிருந்தோம்.**

**ஏற்கனவே எரிவாயுவின் விலை கணிசமான அளவில் உயர்த்தப்பட்டிருந்தது. அதனை அடுத்து உணவுப்பொருள்கள் மற்றும் தின்பண்டங்களின் விலை அதிகரித்தது.**

**போதாக்குறைக்கு உலக சந்தையில் பால்மா வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்து அதனடிப்படையில் பால்மா விலையும் உயர்ந்தது.**

**இலங்கையின் பொருளாதார நிலைமை வீழ்ச்சி கண்டு வரும் சூழலில் அதன் விளைவாக இலங்கை ரூபாவின் பெறுமதியும் சரிந்தது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி 160 ரூபாவையும் தாண்டியது.**

**இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைந்ததால் அதன் விளைவாக இறக்குமதிப் பொருள்களின் விலைகளும் பெரிய அளவில் ஏறும் என முற்கூட்டியே ஆருடம் கூறப்பட்டது.**

**அதில் குறிப்பிடத்தக்க ஒன்றாக எரிபொருள் விலை உயர்வு எதிர்பார்க்கப்பட்டது.**

**எதிர்பார்க்கப்பட்டபடி நேற்றிரவு முதல் எரிபொருள் விலையும் எகிறியுள்ளது.**

**இனி என்ன ?**

**இந்த எரிபொருள் விலை ஏற்றத்தின் தொடர்ச்சியாக அத்தியாவசியப் பொருள்கள், அத்தியாவசிய சேவைகள், உணவுப் பொருள்கள் எல்லாவற்றினதும் கட்டணங்கள் உயரும்.**

**குறிப்பாக போக்குவரத்துக் கட்டணம் மித மிஞ்சிய அளவுக்கு அதிகரிக்கலாம். அதன் தாக்கம் ஒவ்வொரு நுகர்வுப்பொருளிலும் எதிரொலிக்கும்.**

**இந்த நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த கையோடு எரிபொருள்களின் கட்டணத்தைக் கணிசமாகக் குறைத்தது என்பதும் –**

**நீண்டகாலம் எரிபொருள்களின் விலைகளை அதிகளவுக்கு உயர்த்த விடாமல், மறித்துக் கட்டி, அது தாக்குப்பிடித்து நின்றது என்பதும் மறுக்கக்கூடியவையல்ல.**

**முன்னைய அரசின் காலத்தில் சர்வதேச சந்தையில் எரிபொருள் கொள்வனவு முறைமையில் மேற்கொள்ளப்பட்ட குளறுபடிகளினால் நாடு பல்லாயிரம் கோடி ரூபாவை மோசமாக இழக்க வேண்டி வந்தமையும், அந்தச் சீரழிவுப் பாதிப்புக்களை எல்லாம் சுமக்கவேண்டிய கட்டாயம் நாட்டு மக்களின் மீதே விழுந்தமையும் கூட மறைக்கப்படக் கூடியவையல்ல.**

**ஆனால், இப்போதைய சடுதியான எரிபொருள் விலை அதிகரிப்பின் போது மண்ணெண்ணெய் விடயத்தில் அரசு கொஞ்சம் நிதானமாக நடந்திருக்கவேண்டும் என்றே தோன்றுகின்றது.**

**நாட்டின் ஏழை மக்களின் பிரதான பாவனைப் பொருள்களுள் ஒன்று மண்ணெண்ணெய். குறிப்பாக குடிசை வாழ் மக்களும் மண்ணெண்ணெய் அடுப்புக்களைப் பயன்படுத்தும் கீழ்மட்டக் குடும்பங்களும் – மிகப் பிரதானமாக மீனவர்களும், விவசாயிகளும் – இந்த மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் மோசமாகப் பாதிக்கப்படப்போகின்றார்கள்.**

**மற்றைய எரிபொருள்களின் விலையை சுமார் 20 வீதத்துக்கு உட்பட்ட தொகையினால் அதிகரித்த அரசு, ஏழைத் தொழிலாளர்களின் பிரதான பாவனைப்பொருளான மண்ணெண்ணெயை மட்டும் நூறு வீதத்துக்கும் அதிகமான தொகையால் கூட்டியிருப்பது மிக அடாத்தான – மிக அபத்தமான நடவடிக்கை போன்று தோன்றுகின்றது.**

**இதுவரை லீற்றர் 44 ரூபாவாக விற்ற மண்ணெண்ணெய் இன்றுமுதல் 106 ரூபா என்பது நினைத்துப் பார்க்க முடியாத அதிகரிப்பு.**

**முன்னைய அரசுகள் தான்தோன்றித்தனமாகப் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக்கடன்களை அடைப்பதனாலேயே நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முடியாமல் இருப்பதாக நல்லாட்சி அரசு கூறுகின்றது.**

**அது சரியோ, தவறோ மக்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இப்போது பொருள்களின் விலைகளில் ஏற்பட்டு வரும் அதிரடி அதிகரிப்பு நாடு மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ளப்போகின்றது என்பதற்கான எச்சரிக்கை.**

**நாட்டின் பொருளாதாரம் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மோசமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது என்பதை உறுதிப்படுத்துவதாக இந்த எரிபொருள் விலை அதிகரிப்பு அமைகின்றது என்று கூறினால் அது தவறல்ல. எங்கே போய் நிற்கப்போகின்றது நமது நாட்டின் எதிர்காலம்?**

## விபத்துக்களை ஏற்படுத்தித் தப்பிச் சென்ற வாகனம் இளைஞர்களால் துரத்திப்பிடிப்பு



யாழ்ப்பாணம், மே 11

நல்லூர் மற்றும் பரமேஸ்வராச் சந்திப் பகுதிகளில் அடுத்தடுத்து விபத்துக்களை ஏற்படுத்தித் தப்பியோடிய வாகனம் இளைஞர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் வாகனத்தைக் கைவிட்டுச் சாரதி தப்பி ஓடிவிட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி கோவில் வீதிப் பகுதியூடாகப் பயணித்தவேளையில் பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதிய நிலையில் நிறுத்தாமல் சென்ற மகேந்திரா ரக வாகனத்தைச் சில இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் விரட்டியுள்ளனர்.

இதன்போது மகேந்திராவின் சாரதி வாகனத்தை நிறுத்தாது வேகமாகச் செலுத்தி திருநெல்வேலிச் சிவன் அம்மன் வீதியூடாகப் பயணித்து பலாலி வீதியை அடைந்துள்ளார்.

பலாலி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை மோதிவிட்டுத் தப்பியோட முயன்ற சமயம் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் வாகனத்தை மடக்க முயன்றுள்ளார். இதனால் வாகனத்தின் சாரதி வாகனத்தைக் கைவிட்டுத் தப்பியோடினார்.

இதனையடுத்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அந்த வாகனத்தைச் சோதனையிட்ட பொலிஸார், அதற்குள் தறித்த மரங்கள் இருப்பதைக் கண்டறிந்தனர்.

அவை அனுமதியற்று ஏற்றிச் செல்லப்பட்ட மரங்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வாகனத்தைக் கைப்பற்றி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## சமுர்த்திக் குடும்பங்கள், மீனவர்களுக்கு பழைய விலையில் மண்ணெண்ணெய்

கொழும்பு, மே 11

மண்ணெண்ணெயின் விலை லீற்றர் 101 ரூபாவாக அதிகரிக்கப்படும்போதும் சமுர்த்திப் பயனாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு பழைய விலையான 44 ரூபாவுக்கே வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

மண்ணெண்ணெயின் விலையை நேற்று நள்ளிரவு முதல் 57 ரூபாவால் அதிகரிக்க அமைச்சரவை அனுமதியளித்தது.

மண்ணெண்ணெயின் விலை பெருமளவில் அதிகரிக்கப்பட்ட போதும், அதனை அதிகளவு பயன்படுத்தும் சமுர்த்திக் குடும்பங்கள் மற்றும் மீனவர்களுக்குப் பழைய விலையிலேயே அது விநியோகிக்கப்படும் என அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார். - (ஐ)

## ராணுவ நினைவுத் தூபியை இன்று திறக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே 11

குருணாகலை – பதுளை வீதி அபிவிருத்தி நடவடிக்கையின் போது அகற்றப்பட்ட குருணாகலை இராணுவ நினைவுத் தூபிக்குப் பதிலாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய நினைவுத் தூபியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று திறந்து வைப்பார்.

வடமேல் மாகாண சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ரணவிரு சேவா அதிகார சபை ஆகியவற்றின் நெறிப்படுத்தலில் பழைய நினைவுத்தூபி காணப்பட்ட இடத்திலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய நினைவுத் தூபியின் நிர்மாணப் பணிகள் இலங்கை இராணுவத்தின் பொறியியல் படையணியினரால் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினரின் அபிமானத்தைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் முன்னர் காணப்பட்ட நினைவுத் தூபியிலும் பார்க்கச் சிறப்பான முறையில் வடமேல் மாகாணத்தில் உயிர்த் தியாகம் செய்த சகல இராணுவத்தினரினதும் விவரங்களை உள்ளடக்கியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய நினைவுத்தூபிக்கான மொத்த செலவு 27 மில்லியன் ரூபாவாகும்.

இந்த மாதத்தில் இடம்பெறும் தேசிய இராணுவ நினைவு மாதத்துடன் இணைந்ததாக இன்று வெள்ளிக்கிழமை புதிய இராணுவ நினைவுத் தூபியை ஜனாதிபதி திறந்து வைக்கிறார். (ஐ)

## வவுனியாவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, மே 11

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று முன்தினம் மாலை வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த பஸ்ஸில் கேரளக் கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியாப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அந்த பஸ்ஸைப் பொலிஸார் சோதனையிட்டபோது அதில் 2 கிலோ 72 கிராம் கேரளக் கஞ்சாவைத் தம் வசம் வைத்திருந்த குற்.....ச்சாட்டில் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 35வயதுடைய சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்தனர். (ஐ-100)

## இராணுவக் கண்காட்சி யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 11

'பனங்காட்டில் புத்திக்கூர்மை' எனும் புதிய கண்டுபிடிப்புகளின் கண்காட்சி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

இராணுவத்தினரின் கண்டுபிடிப்புக்களை வடக்கு மக்களுக்கு பயன்பெற வைக்கும் நோக்கில் யாழ்ப்பாணப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி நேற்றும் இன்றும் இடம்பெறுகின்றது

யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்

இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் புதிய படைப்புக்களை ஊக்கப்படுத்தும் விதமாக யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட படைப்பிரிவுகளிலுள்ள இராணுவச் சிப்பாய்களால் உருவாக்கப்பட்ட சுமார் 280 இற்கும் மேற்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியை யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (ஐ)

### நாளை

12.05.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : உத்தரட்டாதி மு.ப.11.55 வரை
திதி : துவாதசி மு.இ. 9.10 வரை
சுபநேரம் : 2.54 – 4.24 வரை
ராகுகாலம் : 08.54 – 10.24 வரை

# நாட்டில் தற்போது சட்டம் சரியான நடைமுறையில்!

## மேர்வின் சில்வா கூறுகிறார்

கொழும்பு, மே 11

நாட்டில் தற்போது சட்டம் சரியான முறையில் அமுல்படுத்தப்படுகின்றது என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தற்போது மரண பயமும் இல்லை, எவரும் அச்சப்படாமல் தமது கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமும் உள்ளது.

இப்போது ஜனாதிபதி, பிரதமர் முதல் எவரையும் விமர்சிக்கக் கூடிய சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது.

கருத்துக்களை வெளியிடுவதால் எவரும் காணாமற்போவதில்லை. வெள்ளை



வான் கலாசாரம் இல்லை. இப்படியான சம்பவங்கள் நான் அங்கம் வகித்த கடந்த அரசிலேயே நடந்தன.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தெரிந்தே இந்த சம்பவங்கள் நடந்தன. இவற்றுக்கு கோட்டாபய ராஜபக்ஷவே பொறுப்புக் கூற வேண்டும்.

கோட்டாபயவின் இந்த நடவடிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டுகொள்ளவில்லை ஆனால், தற்போது சட்டம் சரியாக அமுல்படுத்தப்படுகிறது.

இலஞ்சம் பெற்ற இரண்டு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர். கடந்த அரசில் நடந்திருந்தால் அது மறைக்கப்பட்டிருக்கும்.

இந்தச் சம்பவத்துடன் மேலும் உயர் மட்ட அதிகாரிகளுக்கு தொடர்புள்ளது. அவர்கள் பற்றியும் விசாரணை நடத்த வேண்டும் எனவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# மகோற்சவம்

பண்டத்தரிப்பு, மே 11

மாதகல் அரசடி ஸ்ரீ சித்தி புத்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

கோண்டாவில் மே 11

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மகோற்சவம் 12 தினங்கள் நடைபெறுவதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ

# மின் தடை

யாழ்ப்பாணம், மே 11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை–

**யாழ் பிரதேசத்தில் -**

புனிதநகர், மாதனை, கற்கோவளம், வெளிச்ச வீடு, தும்பளை, வறாத்துப்பளை, திகிரி, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

கணேசபுரம் கிராமம், கல்மடு கிராமம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன்பிட்டி, ஆத்திக்குளி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் – மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

# அரசுக்கு எதிரானவர்களை சிறையில் அடைக்க முயற்சி

## எச்சரிக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மே 11

அரசுக்கு எதிரானவர்களை சிறையில் அடைக்கும் நோக்கில் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விசேட நீதிமன்றங்களை அமைக்கும் சட்டத் திருத்தமானது, தெளிவாக அரசுக்கு எதிரானவர்களை வேட்டையாடும் நோக்கிலானது.

அரசுக்கு எதிராக குரல் கொடுக்கும் அரசியல் பிரமுகர்களின் வாயை அடைத்து அவர்களை வேட்டையாடும் நோக்கிலானது இந்த சட்டமாகும். அரசியல் கலாசாரத்தை தூய்மைப்படுத்தும் நோக்கில் இந்த சட்டம் உருவாக்கப்படவில்லை.

இந்த புதிய சட்டத்தின் ஊடாக பிரதம நீதியரசரின் அதிகாரங்களை அரசியல்வாதிகள் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர். விசேட நீதிமன்றங்களை அமைக்



கும் அதிகாரம் பிரதம நீதியரசருக்கே காணப்படுகின்றது.

இந்த அதிகாரத்தை அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்கும் நோக்கில் புதிய சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நீதிமன்றங்களை அரசியல் மயப்படுத்தும் முயற்சிகளாகவே இந்த விடயங்களை நோக்க வேண்டும்.

கள்வர்களை பிடிப்பதற்காக இந்த சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக அரசியல்வாதிகளை சிறையில் அடைக்கும் நோக்கில் சட்டம் உருவாக்கப்படுகிறது என்றும் மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ் சுமத்தியுள்ளார்.

# 'கொளு ஹறதவத்த' திரைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம் மே 11

அண்மையில் மறைந்த இலங்கைத் திரைப்பட மேதை லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸிற்கு அஞ்சலியாக, அவர் நெறியாள்கை செய்த புகழ் பெற்ற திரைப்படமான 'கொளு ஹறதவத்த' (ஊமை உள்ளம்) என்னும் சிங்களத் திரைப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பொது சன நூலகக் கேட்போர் கூடத்தில் காண்பிக்கப்படும்.

திரைப்படத்தின் முடிவில் வழமை போல் கலந்துரையாடலும் இடம்பெறும். இலவசமாகக் காண்பிக்கப்படும் இக் கண்காட்சிக்கு ஆர்வமுடைய எவரும் வருகை தரலாமென, நூலக வாசகர் வட்டத்தினர் தெரிவிக்கின்றனர். (இ

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கொழும்பு, மே 11

டெங்கு தொற்று பரவக்கூடும் என அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



மேல், சப்ரகமுவ மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் டெங்கு பரவல் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த டெங்கு ஒழிப்பு நட வடிக்கையில் பொலிஸ், இராணுவம் மற்றும் 700 சுகாதார அணிகள் களம் இறங்கியுள்ளன.

# பாதுகாப்பற்ற ரயில் கடவையால் பெரும் அச்சத்தில் பொதுமக்கள்!

மட்டக்களப்பு, மே 11

மட்டக்களப்பு மாமாங்கம், இருதயபுரம் பிரதான வீதிக்குக் குறுக்கே செல்லும் ரயில் கடவை பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதனால் அந்த வீதி ஊடாக செல்லும் பயணிகள் பெரும் அச்சத்தின் மத்தியில் பயணிக்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு மாமாங்கம் - இருதயபுரம் பிரதான வீதிக்கு குறுக்கே செல்லும் மட்டக்களப்பு கொழும்புக்கான பிரதான ரயில் பாதையில் உள்ள கடவையே இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் நாளாந்தம் இந்த வீதியூடாகப் பயணிக்கின்றன

மட்டு இருதயபுரம் வீதிக்கு குறுக்கே செல்லும் வீதியில்



எனவும், இந்த வீதியில் உள்ள ரயில் கடவைக்குப் பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமல் இருப்பதால் பயணிக்கும் வாகனங்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்றும் பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், அண்மையில் இந்த இடத்தில் வாய் பேச முடியாத இளைஞன் ஒருவர் ரயிலில் மோதுண்டு உயிரிழந்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மேலும், உரிய அதிகாரிகள் இதற்காக உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கரவெட்டியில் விதாதா வள நிலையத்தில்

# உணவுப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி நெறி

கரவெட்டி, மே 11

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசப் பயிற்சி நெறியான அரிசிமாவிலிருந்து மிக்சரும், பாலிலிருந்து பன்னீர், யோகட் மற்றும் பால்ரொபி தயாரிப்புப் பயிற்சி நெறி எதிர்வரும் 17 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நடைபெற உள்ளது.

இப் பயிற்சி நெறிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் 17.05.02018 இற்கு முன்பாக கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென கரவெட்டி பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு 0212264958 / 0771869015/0777466067 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## தினசரி ராசி பலன் (11.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஏகாதசித்திதி இரவு 11.42 மணி வரை பின்னர் துவாதசி. நட்சத்திரம்: பூரட்டாதி பகல் 10.33 மணி வரை பின்னர் உத்தரட்டாதி. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 10.33 மணி முதல் 12.06 மணி வரை.

**சுபநேரம்** - காலை 5.54 மணி முதல் 7.23 மணி வரை.

இன்று ஏகாதசி விரதம்.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை ஏகாதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - பூரட்டாதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சஞ்சலமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தராது. குழப்பமான மன நிலை இருக்கும். கடன் வாங்காமல் சமாளிப்பது அவசியம். சிறு விபத்து ஏற்படும் நிலை உள்ளதால் கவனம் தேவை.

**ரிஷபம்** இனிமையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். இல்லத்தில் இனிய சூழ்நிலை நிலவும். புத்திர வழியால் மகிழ்ச்சி உண்டாகும். சிலர் உல்லாசப் பயணத்தை மேற்கொள்வார்கள்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். தேவையற்ற ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. எடுக்கும் முயற்சிகள் தாமதத்தின் மேல் வெற்றி பெறும். பயணத்தின் போது அவதானம் தேவை.

**கடகம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் நிம்மதியான போக்கு நிலவி வரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு நற்பயன்களைத் தரும். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

**சிம்மம்** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரம் லாபமும் நட்டமுமாக இருக்கும். உடல் நிலையில் ரோகங்கள் உண்டாகும். குடும்பத்தில் அமைதி காணப்படும்.

**கன்னி** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வியாபாரம் லாபமும் நட்டமுமாக இருக்கும். குடும்பத்தில் அமைதி காணப்படும். மாணவர்களுக்கு நினைவாற்றல் குறையும்.

**துலாம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோஷம் குடி கொள்ளும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் வலிய வந்து சேர்வார்கள். சகோதர உறவு பலப்படும்.

**விருச்சிகம்** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். உறவினர் வரவால் களிப்பும், கலகலப்பும் அதிகரிக்கும்.

**தனுசு** சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் யோசனை அதிகரிக்கும். பணம் தட்டுப் பாடாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். உடலில் சோர்வு தென்படும். தொழிற் பிரிவினருக்கு உழைப்பு கடுமையாக இருக்கும்.

**மகரம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். வியாபாரத்தில் நேரடிக் கவனம் தேவை. தேவையற்ற அலைச்சல்களுக்கு உடல் நலம் கெடும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் குறையும்.

**கும்பம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். வியாபாரம் துரித வளர்ச்சி அடையும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

**மீனம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். பெண்களால் அனுகூலம் உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

**சந்திராஷ்டம நாள்: புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

தமிழ்ப் பெண் அவதூறு:

# ரயில் அதிகாரியை பணி நீக்க வேண்டும்

## செந்தில் தொண்டமான் கோரிக்கை



கொழும்பு, மே 11

யாழ். ரயிலில் பயணித்த பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கெட்ட வார்த்தைகள் பேசிய ரயில் அதிகாரியை உடனடியாக பதவியிலிருந்து நீக்க வேண்டும் என இ.தொ.கா உப தலைவரும் ஊவா மாகாண அமைச்சருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்தின் சார்பில் அந்த அதிகாரியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் பெண்களையோ அல்லது தமிழர்களையோ இழிவான வார்த்தைகளால் கொச்சைப்படுத்தி பேசவும் இனவாத சிந்தனையில் அடக்கு முறையைப் பிரயோகிக்கவும் எவருக்கும் உரிமை கிடையாது என்பதை தெளிவு படுத்த விரும்புகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். ரயிலில் பயணித்த தமிழ் பெண் ஒருவர் மீது ரயில் அதிகாரி ஒருவர் தகாத முறையில் நடந்து கொள்ள முற்பட்ட விவகாரம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

யாழ் ரயிலில் பயணித்த பெண் ஒருவர் மீது ரயில் அதிகாரி ஒருவர் இனவாத ரீதியாகவும், தவறான முறையிலும் நடக்க முற்பட்டு கெட்ட வார்த்தைகளால் அந்தப் பெண்ணை திட்டித் தீர்த்துள்ளார்.

இவ்வாறு தமிழர்கள் மீது இழிவான முறையில் நடந்து கொள்ளவும், தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கவும் எவருக்கும் உரிமை கிடையாது. தமிழ் மக்கள் வேறு எந்த இனத்தவர்க்கும் தரம் தாழ்ந்தவர்கள் இல்லை.

இந்த ரயில் அதிகாரி மது போதையில் இருந்தார் எனத் தெரிகிறது. இந்த அதிகாரியின் செயற்பாடானது ஒவ்வொரு தமிழரினதும் தன்மானத்தை உரசிப் பார்ப்பதாக உள்ளது.

இத்தகைய இனவாதம் கொண்ட அதிகாரியை பணியிலிருந்து இடைநிறுத்தி பக்கச்சார்பற்ற உடனடி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். தகுந்த ஆதாரங்களுடன் அவரைப் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திடம் அழுத்தமாக கேட்டுக் கொள்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடுமையான வெப்பநிலை மே 25 வரையில் நீடிக்கும்



கொழும்பு, மே 11

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் கடும் வெப்பத்துடனான காலநிலை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

சில பிரதேசங்களில் தற்பொழுது நிலவி வரும் மழையுடனான காலநிலை மற்றும் சில பிரதேசங்களில் நிலவி வரும் உடலுக்கு உசிதமற்ற வெப்ப நிலை தொடர்ந்தும் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஜனக குமார தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் கடுமையான வெப்ப நிலை நீடிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வறட்சி நிலவி வருவதால் வெப்பத்துடன் கூடிய கால நிலை நீடித்து வருவதாகவும் ஏனைய பகுதிகளில் வளிமண்டலத்தின் நீர் ஆவியாதல் காரணமாகவும் வெப்பநிலை அதிகரித்துள்ளது என தெரிவித்துள்ளார்.

25 ஆம் திகதியின் பின்னர் மழை பெய்யும் எனவும் அதன் பின்னர் இந்த வெப்பத்துடன் கூடிய காலநிலை குறைவடையும் என அவர் கொழும்பு ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

# ஐ.தே.க. பதவிகளில் மேலும் சில மாற்றம்

கொழும்பு, மே 11

ஐக்கிய தேசியக் கட்சியில் மேலும் சில மாற்றத்தை ஏற்படுத்த நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் அரசியல் பீடக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள பதவி நிலைகளில் உள்ளவர்களுக்கு உதவியளிக்கும் நோக்கில் மேலும் சில பதவிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது என பிரதி அமைச்சர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

# முகப்புத்தகத்தின் பிரதிநிதிகள் இலங்கையில்!

கொழும்பு, மே 11

முகப்புத்தக நிறுவனத்தின் 3 பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

சமீபத்தில் கண்டியில் ஏற்பட்ட அமைதியற்ற நிலைக்கு காரணமான குரோத கூற்றுக்களை முகப்புத்தகத்தின் ஊடாக வெளியிடப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்யவே இவர்கள் இங்கு வந்துள்ளனர்.

சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் முகப்புத்தக நிறுவனங்களின் உறுப்பினர்களே இங்கு வருகை தந்துள்ளனர்.

# தகவலறியும் உரிமைச் சட்ட உரிமையை மக்கள் பயன்படுத்த ஊடகவியலாளர் முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும்


கொழும்பு, மே 11

தகவலறியும் உரிமைச் சட்ட உரிமையை பொதுமக்கள் பயன்படுத்த ஊடகவியலாளர்கள் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும் என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் மேலதிக செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பொது மக்களின் தகவலறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான சர்வதேச மாநாட்டின் இரண்டாவது நாள் கலந்துரையாடல்கள் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தி ஒரு வருட கால நிறைவை முன்னிட்டு இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் நோர்வே தூதுவராலயம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் ஏழு நாடுகளை கொண்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இரண்டு நாள் நடைபெற்ற இந்த மாநாட்டின் முதல் நாளில் இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான நடைமுறைத் தன்மைகளும் அவ்வுரிமைச் சட்டத்தின் பயன்பாடுகள் மற்றும் அவற்றால் ஏற்பட்ட நன்மைகள் குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தன.



இதன்படி நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது நாள் கலந்துரையாடலின் போது, பாகிஸ்தான், இந்தியா மற்றும் நோர்வே போன்ற நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கற்றுக் கொண்ட பாடங்களை அந்த நாட்டு பிரதிநிதிகள் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

## நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் அறிவுறுத்தல்

மேலும், நேற்றுமுன்தினம் மாநாட்டில் இலங்கை அரசின் கீழ் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தும் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் பயன்பாடுகளும் அதனை நடைமுறைப்படுத்தும் செயல்வடிவம் குறித்தும் பிற நாடுகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது எதிர்வரும் காலங்களில் ஏனைய நாடுகளின் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கற்றுக் கொண்ட பாடங்களை முன்னுதாரணங்களாகக் கொண்டு இலங்கையில் இந்தச் சட்டத்தை வெற்றிகாண செய்ய வேண்டிய திட்டங்கள் குறித்த ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, இலங்கை ஊடகவியலாளர்களினால் தகவலறியும் உரிமைச் சட்டமானது, தரம் ஆறு முதல் உயர்கல்வி வரையிலான மாணவர்களின் கல்வித் திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்பது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனை தாம் கவனத்தில் எடுக்கப்போகின்றோம் என்று நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் மேலதிக செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்திருந்தார்.

அவற்றுடன் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும்போது கோரிக்கையாளர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்கள் குறித்தும், அவர்களின் பாதுகாப்பு உத்தரவாதம் குறித்தும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதுவரையில் இலங்கையானது தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய பக்கச்சார் திட்டங்களே அவ்தானத்தில் கொள்ளப்பட்டிருந்தன என்றும் இந்த வருடம் முதல் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு பொது மக்களுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ஊடகவியலாளர்களின் பங்களிப்பு அளப்பரியது என்பதோடு, ஊடகவியலாளர்கள் இதற்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(க)

# எதிர்க்கட்சியில் இணைந்து அரசின் குறைகாண்போம்!

கொழும்பு, மே 11

ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தும் பலமான சக்தியாக உருவாக்குவதே எமது இலக்காகும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய அரசில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் செயற்பட்ட 16 உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளோம். சுயாதீனமாக தீர்மானம் எடுப்பதற்கு ஜனாதிபதி எமக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

அதற்கமைய நாம் எதிரணியில் அமர தீர்மானம் எடுத்தபோது கூட்டு எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் எமக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.



எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான அனுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் இணைந்து எதிர்க்கட்சியின் பிரதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்படவும் நாம் தயாராக உள்ளோம் என வும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# 20 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்ற மின்சாரசபை உத்தியோகத்தர் கைது!

கொழும்பு, மே 11

இலங்கை மின்சார சபையின் நிகவெரெட்டிய பிரதேச அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

20 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என லஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொத்துஹர பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரால் நிகவெரெட்டிய, ஹீலோகம பிரதேசத்தில் நடத்திச் செல்லப்படுகின்ற மிருக உணவு தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான வேலைகளைச் செய்து கொடுப்பதற்கு 20 ஆயிரம் ரூபா லஞ்சமாகக் கேட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் குருநாகல், ரத்தலிய சந்திப் பிரதேசத்தில் வைத்து லஞ்சப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் போது நேற்றுமுன்தினம் மாலை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருந்தார்.

(கு)


## கடற்கரையோரப் பிரதேசங்களில்

# அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

வெலிகம - மிரிஸ்ஸ, தெஹிவளை - கல்கிஸ்ஸை மற்றும் நீர்கொழும்பு கடற்கரைப் பிரதேசங்களில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை இந்த மாதத்துக்குள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது எனக் கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் சுற்றுலாத் துறையினர் அதிகளவில் சுற்றுலா மேற்கொள்கின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனக் கடற்கரை பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



பொலிஸார் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் ஒத்துழைப்புடன் இந்தப் பணிகளை முன்னெடுக்கின்றனர் என அதன் பணிப்பாளர் பீ.கே.பிரபாத் சந்திரசிறி தெரிவித்தார்.

# நுண் நீர்ப்பாசன முறைமை விவசாயிகளுக்கு அறிமுகம்

கொழும்பு, மே 11


விவசாய ஊக்குவிப்புச் செயற்றிட்டத்தின் கீழ் நிந்தவூர் பிரதேச விவசாயிகளுக்கு நுண் நீர்ப்பாசன முறைமை தொடர்பாக அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிந்தவூர் பிரதேசத்துக்குட்பட்ட அட்டப்பளம் கிராமத்தில் நிந்தவூர் விவசாயப் போதனாசிரியர் சஜிகலா ரகுநந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

தண்ணீர் விரயத்தைக் கட்டுப்படுத்தி வினைத்திறனுடனான நீர்ப்பாசனத்தை முன்னெடுத்தல் இந்தப் புதிய பொறிமுறையின் நோக்கமாகும்.

இந்த முறைமையின் கீழ் அளவான தண்ணீர் போதுமானதுடன், தண்ணீர் வீண் விரயமாவதில்லை என விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த நிகழ்வின் போது, விவசாய உதவிப்பணிப்பாளர் அழகுமலர் ரவீந்திரன், திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





காலைக்கதிர் Kalaikkathir







# போதை ஒழிப்பு நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் பெரியளவில் நடைபெறும் போதைப் பொருள் பாவனையை ஒழிக்கும் நோக்கத்தில் யாழ். உலமா சபையும் யாழ். பள்ளிவாசல்கள் மற்றும் நமூக நல அமைப்புக்கள் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து மிகப் பெரும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக கடந்த வெள்ளிக்கிழமை ஜும்மா பிரசங்கம் மூலம் போதைவஸ்து பாவிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் சகல பள்ளிவாசல்களிலும் மக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து அரச அதிகாரிகளின் உதவிகள் மூலம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் கடந்த இரு தினங்களாக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் மற்றும் யாழ். மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை சந்தித்து இது விடயமாக கலந்துரையாடப்பட்டது.

வட மாகாண ஆளுநர் இல்லத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் போதை ஒழிப்பு சம்பந்தமான அரச உயர் அதிகாரிகளை அழைத்து யாழ். முஸ்லிம் சங்கங்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவுள்ளது.

(இ-19)

# 2020 இல் கண்ணிகள் அகற்றும் பணி நிறைவு பெற்றுவிடும் என்கிறது 'ஸார்ப்'

## இதுவரை 4, 085 வெடிப் பொருள்கள் மீட்டு அழிப்பு





கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப் பகுதியில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் இயங்கி வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் நான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நானூற்று ஐம்பது சதுர மீற்றர் பரப்பளவில் (468,450 Sqm) இருந்து நான்காயிரத்து எண்பத்து ஐந்து (4085) அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்று 'ஸார்ப்' நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தற்போது முகமாலை, கிளாலி பகுதிகளில் யுத்தத்தின் போது யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் புதைக்கப்பட்டுள்ள வெடி பொருள்கள் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன என்றும் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் தெரிவித்தார்.


மேலும் இலங்கையில் 2020 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கான திட்டங்களை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிறுவனத்தில் மொத்தம் 112 பணியாளர்கள் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபடுகின்றனர் என்றும் அவர்களில் 10 பெண் பணியாளர்கள் உள்ளடங்குகின்றனர் என்றும் குறிப்பிடத்தக்கது.



யாழ். ஆணைக்கோட்டை சாவற்கட்டு முதியோர் சங்கத்தினரால் சமூக சீராளன் யோசேப்பாலாவின் சேவைகள் மற்றும் சக வாழ்வு, சமூக விழுமியங்களின் அர்ப்பணிப்புக்காக அப்பகுதி மற்றும் அயல் கிராம பெரியார்களினால் 'பல்துறை விற்பன்னர்' பட்டம் வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

(இ-19)



# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்றும் திங்களும்

யாழ்ப்பாணம், மே 11

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறை SLILG மற்றும் UNDP ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் எதிர்வரும் இன்று வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும் யாழ்ப் பாணம் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

இந்த ஒருநாள் பயிற்சி பட்டறையில் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், உபதவி சாளர்கள், தவிசாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் சகல சபைகளுக்கும் தெரிவித்துள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு, பருத்தித்துறை, வலி வடக்கு, வலி. மேற்கு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு, வடமராட்சி தெற்கு மேற்கு ஆகிய பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வல்வெட்டித்துறை நகர சபை, பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, நல்லூர் பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேசசபை, வலி தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் பயிற்சி பட்டறை இடம்6 : றவுள்ளது.

பயிற்சி பட்டறையில் தவிர்க்க முடியாத காரணத்தால் யாராவது உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாவிட்டால் அவ் விவரம் தொடர்பாக இரு நாள்களுக்கு முன்னர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

(இ-21)

# குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்குமுகமாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை கள ஆய்வு


## பிரதேச சபைத் தலைவர் முழு முயற்சி



வரவிருக்கின்ற வறட்சியுடன் கூடிய கால நிலையை சமாளிப்பதற்காகவும், மக்களுக்கு இடைவெளிகளற்று தொடர்ச்சியாக முறையான குடிதண்ணீர் விநியோகத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கோடும் புச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுக் கிணறுகள் அனைத்தும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அந்த அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய கிணறுகளின் எண்ணிக்கை, எவ்வகையாக புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பாக ஒரு களஆய்வுப் பயணம் ஒன்றை எமது பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைவர் சு.சுரேன் மேற்கொண்டு நிலைமைகளை நேரடியாக ஆராய்ந்து வருகின்றார்.

அந்தந்த கிராமங்களின் பொது அமைப்புக்கள் சார்ந்தவர்களின் ஆலோசனைகளையும் பெற்று இனி வரும் காலங்களில் எமது பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்துக்குள் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடுகளை நிரந்தரமாகவே நீக்கி எமது மக்களின் அடிப்படைத் தேவையான நீரை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம் எம் ஆட்சிக் காலத்தில் எம்மாலான அத்தனை முயற்சிகளையும் ஏற்படுத்திக் கொடுப்போம் என அப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைவர் சு.சுரேன் உறுதியளித்தார்.



# புகைத்துக் கொண்டிருக்கும் எரிமலைக்குள் இறங்கி கந்தகம் தேடும் துணிகரம்

சா. ஜெ. முகில் தங்கம்


அந்தக் கிராமத்தின் பெரும்பாலான தொழிலாளர்களின் நாள் நள்ளிரவுக்குப் பின் 2 மணிக்கெல்லாம் தொடங்கி விடுகிறது. தொடர்ந்து 12 மணி நேரம் வேலைப் பார்த்தாலும் அவர்களுக்கான ஊதியம் வெறும் 10 இலிருந்து 12 டொலர்கள்தான். இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவா பகுதியில் இருக்கும் அந்தக் கிராமம் மட்டுமல்ல; அதன் அருகில் இருக்கும் பல்வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இதே நிலைமைதான்.

உலகிலேயே மிகக் கடினமான வேலையைப் பார்க்கிறார்கள் இவர்கள் எனப் பலரும் சொல்கின்றனர். அத்தகைய கடினமான வேலை என்பது எரிமலைக்குள் இறங்கி கந்தகத் தாதுகளை (Sulphur Ore) வெட்டியெடுப்பது. எந்நேரத்திலும் வெடித்துச் சிதறலாம் எனும் நிலையில் புகைந்துகொண்டே இருக்கும் எரிமலையில் கந்தக தாதுகளை வெட்டியெடுப்பது இன்னும் பதைபதைக்க வைக்கிறது.

இந்தோனேஷியா நாட்டின் மூலையில் அமைந்துள்ள ஜாவா தீவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது கவா இஜென் (Kawah Ijen) எரிமலை. இந்த எரிமலையைச் சுற்றியுள்ள பகுதிகளின் மக்களில் பெரும்பாலோர் எரிமலைக்குள் கந்தகத்தை வெட்டியெடுக்கும் வேலையைத்தான் செய்கின்றனர்.

**எரிமலை உறங்கினாலும் எந்நேரத்திலும் வெடிக்கலாம்**

தினமும் அதிகாலை இரண்டு மணிக்கே எரிமலையின் மீது ஏறத் தொடங்கி விடுகின்றனர் கந்தக சுரங்கத் தொழிலாளர்கள். ஏறக்குறைய 6500 அடி உயர எரிமலையில் ஏறி அதன் முகப்புப் பகுதியை அடைந்து கீழே இறங்குகிறார்கள். தற்போதைய நிலையில்



கவா இஜென் எரிமலை வெடிக்காமல் உறங்கிக் கொண்டிருந்தாலும் எந்நேரத்திலும் வெடிக்கலாம் என அதிர்ச்சியளிக்கின்றனர் எரிமலை ஆய்வாளர்கள்.

விடிகாலை இரண்டு மணிக்கு எரிமலை ஏறத் துவங்கும் தொழிலாளர்கள், உதவிக்கு ஒரு டார்ச்லைட் மட்டுமே வைத்திருக்கின்றனர். விடிய விடிய பனிப்புகை வழியை ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிடும். அது மட்டுமில்லாமல் காற்றில் கலந்திருக்கும் எரிமலைத் துகள்களும், கந்தக தீப்பொறிகளும், எரிமலையின் புகையும் மூச்சு விடுவதில் சிரமத்தை ஏற்படுத்துகின்றன. உயரத்துக்குச் செல்லச் செல்ல இதன் செறிவும் அதிகரிக்க ஆரம்பித்து விடும். இதனைச் சமாளிக்கக் கூட முகத்தில், ஒரு சிறிய முகமூடியை மட்டுமே அணிகின்ற னர். அதனைத் தவிர பாதுகாப்புக் கருவிகள் எதுவும் அவர்களிடம் இல்லை.

எரிமலையின் முகப்புப் பகுதியில் இறங்க இறங்கக் கந்தக கனிமத் தாதுவானது மழைப் போலக் கொட்டிக் கிடக்கிறது. தங்கத்தின் நிறத்தில் மின்னும் மஞ்சளில் உறைந்து கிடக்கின்றன. அதை உடைத்து நொறுக்கி பல பல துண்டுகளாக்கி தங்களது கூடைகளில் வைத்து கீழே இறங்குகின்றனர் சுரங்கத் தொழிலாளர்கள்.

**பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றி தொழில் புரியும் பணியாளர்**

சுரங்கம் என்று சொல்வதால் சுரங்கத்துக்கான பிம்பத்தை மனதில் கொண்டு வராதீர்கள். ஏனென்றால் இந்தக் கந்தக தாதுகள் எரிமலையின் முகப்புச் சரிவுகளில் பாறாங்கற்களைப் போலக் கொட் டிக் கிடக்கின்றன. அதை வெறுங்கையாலும் கிடைத்த இரும்புக் கம்பி, கட்டைகளால் பெயர்த்து எடுக்கின்றனர். இதை வெட்டியெடுக்கக் கூட ஒழுங்கான உபகரணங்களோ கையுறைகளோ அவர்களிடம் இல்லை. அதனை வழங்கவுமில்லை.

இதனால் உடலில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படலாம் எனச் சொல்கின்றனர் ஆய்வாளர்கள். ஒருமுறை வெட்டியெடுக்கப்படும் கந்தகத் தாதுகளின் அளவானது சராசரியாக 175 பவுண்டுகள் வரை இருக்கும். அதை தங்களது தோள் கூடைகளில் ஏற்றிக்கொண்டு கீழே சென்று இறக்கிவிட்டு மீண்டும் மேலே ஏற்கின்றனர். இப்படி ஒரு நாளில் பலமுறை கீழேயும் மேலேயும் ஏறி உழைக்கின்றனர். ஒருகிலோ கந்தக தாதுவுக்கு 8 செண்ட் மட்டுமே கூலி. ஒருநாளைக்குச் சராசரியாக 12 டொலர்கள் வரை கூலியாகப் பெறுகின்றனர். ஆனால் சீனாவுக்கும், உலகின் மற்ற நாடுகளுக்கும் இந்தோனேஷியாவிலிருந்து இந்தக் கந்தகம் பெரியளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## ஆபத்தான, பயங்கரமான பணியில் ஏழ்மைமிக்க தொழிலாளர்கள்



இந்த எரிமலையின் முகப்புக்குள் ஒரு மிகப்பெரிய அசிட் ஏரி (Crater Lake) உள்ளது. இது நீல ஏரி எனவும் அழைக்கப்படுகிறது. இந்த ஏரியில் இருக்கும் அசிட்டின் PH மதிப்பு 0.5. அதாவது நமது கார் பற்றரிகளில் இருக்கும் அசிட் போன்றது. மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும் தொடர்ச்சியாக உடலின் மேல் படுவதால் பாதிப்புகள் நிகழும். இந்த ஏரிக்கு அருகில்தான் பெரும்பாலான கந்தகத் தாதுகள் இருக்கின்றன. மேலும், பகல் நேரங்களில் இந்தப் பகுதியின் வெப்ப நிலை சாதாரண வெப்பநிலையை விட அதிகமாக இருக்கிறது.

இத்தகைய அபாயங்களைக் கொண்ட இஜென் எரிமலைச் சுரங்கமானது மிகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகவும் இருந்துவருகிறது. எரிமலையின் முகப்புப் பகுதியில் கண்ணைக் கவரும் வகையில் தோன்றும் நீல நிற தீச்சு வாலைகள் தான் சுற்றுலாவுக்கான முக்கிய காரணம். இதற்காகவே தினமும் 100 சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர். செல்ஃபிக்காக மட்டும் பலரும் இங்கு வருகிறார்கள்.

**ஏழ்மையைச் சுற்றுலாவாக்கும் நியாயமற்ற செயல்**

பலர் ஏழ்மையைச் சுற்றுலாவாக்குவது நியாயம் இல்லை என்கின்றனர். இருளில்தான் இந்த தீச்சுவாலைகளைப் பார்க்க முடியும் என்பதால் அதிகாலை 3 மணிக்கெல்லாம் சுற்றுலாப் பயணிகளும் எரிமலை ஏறுகின்றனர். பல சுரங்கத் தொழிலாளிகள் தங்களது வேலையை விட்டுவிட்டு சுற்றுலா வழிகாட்டியாக மாறி வருகின்றனர். கடந்த மார்ச் 22 இல் எரிமலையிலிருந்து அதிகப்படியான செறிவில் தீப்பொறிகளும் எரிமலைத் துகள்களும் வெளியானதில் 30 இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதனால் தற்காலிகமாக சுரங்கத்தையும் சுற்றுலாவையும் நிறுத்தி வைத்தனர். மறுபடியும் ஏப்ரல் இரண்டாம் வாரத்திலேயே எரிமலை மீண்டும் திறக்கப்பட்டது.

ஏறக்குறைய 130 எரிமலைகள் வெடிக்கும் நிலையில் இருக்கும் நாடு இந்தோனேஷியா. எரிமலை வெடிப்பு என்பது சாதாரணமாக நிகழும் இந்தோனேஷியாவில் எரிமலைக்குள் இறங்கி வேலை செய்வதும் சாதாரணமாக இருக்கிறது. எரிமலை வெடிக்கிறதோ இல்லையோ அதனைத் தாண்டி வேலைப் பார்க்கும் தொழிலாளர்களுக்கு வேலையில் முறையான பாதுகாப்பு கூட இல்லை.

## இந்தோனேஷியாவில் எவ்வேளையிலும் வெடிக்கக் கூடிய நிலையில் 130 திகிலூட்டும் எரிமலைகள்!

கடந்த 40 வருடங்களில் 74 சுரங்கத் தொழிலாளர்கள் சல்பர் டை ஒக்சைட், ஹைட்ரஜன் சல்பைட் போன்றவற்றின் தாக்கத்தால் இறந்துள்ளனர்.

உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் எளியவர்களின் வாழ்க்கை இப்படி ஆபத்து நிறைந்ததாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் மாற்றாமல் எப்படி மனிதச் சமூகம் நாகரிகமடைந்ததாகச் சொல்லிக் கொள்ள முடியும்?

# யாழ். சுண்டுக்குழியில் நாளை கூடைப்பந்தாட்டத் திடல் திறப்பு

யாழ்ப்பாணம், மே 11

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் கூடைப்பந்தாட்டத்திடலின் சிறப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சுண்டுக்குழி, பழைய பூங்கா வீதியில் சங்கத்தின் தலைவர் த.சிவதாஸ் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் சிறப்பு விருந் தினர்களாக யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், வடக்கு மாகாண விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கௌரவ விருந்தினர்களாக யாழ். மேலதிக அரச அதிபர் (காணி) எஸ். முரளி தரன், யாழ் பிரதேச செயலர் பி.தயானந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

**மாலைப் பொழுதில் காட்சிப் போட்டியும்**

மைதானத்திடல் மற்றும் பார்வையாளர் அரங்கு திறப்பு நிகழ்வுகளைத் தொடர்ந்து கூடைப் பந்தாட்ட காட்சிப் போட்டியும் இடம்பெறும். (இ)



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5 | பகுதி - I | 32

- நிமலன், கமலன் ஆகிய இருவரினதும் நிறைகளினதும் கூட்டுத்தொகை 60 kg எனவும் கமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 64 kg எனவும் நிமலன், கமலன், அமலன் ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 98 kg எனவும் தரப்படின்

20) அமலனின் நிறை யாது?

1. 30 kg　　2. 34 kg　　3. 38 kg

21) நிமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை ?

1. 680kg　　2. 72kg　　3. 760kg

22) இக் கலந்துரையாடலை வாசித்து, அதன் படிமுறைகள் சரியான ஒழுங்கில் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க

A– ஆ! மிகவும் அழகான சட்டை

B– ஆம். எனக்கு மிகவும் விருப்பம்

C– உண்மையா! இது புதிய ஒன்று அல்ல

D– நீர் இதனை விரும்புகிறீரா?

1. ACEDB　　2. ADBCE　　3. ABDEC

23) கூம்பகம் ஒன்றின் மேற் பகுதியிலிருந்து அதே வடிவமுள்ள ஒரு சிறிய கூம்பகத்தை வெட்டி எடுக்கும்போது எஞ்சியிருக்கும் பகுதியில் எத்தனை முகங்கள் இருக்கும்?

1. 6　　2. 5　　3. 4

24) நிமலன் திங்கட்கிழமையிலும் பார்க்கரு 10 குறைவாகச் செவ்வாய்க்கிழமைகளிலும் செவ்வாய்க்கிழமையிலும் பார்க்கரு 5 குறைவாகக் புதன்கிழமையிலும் செலவு செய்தான். அவன் செவ்வாய்க்கிழமை ரு 30 ஐச் செலவு செய்தால், மூன்று நாள்களிலும் செலவு செய்த மொத்தப் பணம்

1. ரு 75　　2. ரு 90　　3. ரு 95

25) ஒரு கயிறு இரு சமபகுதிகளாக வெட்டபட்டு, அவற்றில் ஒருபகுதி மறுபடியும் நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அத்துண்டுகளில் ஒன்றின் நீளம் 1 மீற்றர் எனின், தொடக்கத்தில் இருந்த கயிற்றின் நீளம்

1. 8 மீற்றர்　　2. 5 மீற்றர்　　3. 4 மீற்றர்

- ஒரு போட்டியின் மூன்று சுற்றுகளில் ஐந்து விளையாட்டு வீரர்கள் விளையாடிய விதங்கள் கீழே உள்ளன.

| | சமன் | கமல் | கணேஷ் | ஹசன் | சேகர் |
|---|---|---|---|---|---|
| முதல் சுற்று | - | + | + | 0 | + |
| இரண்டாம் சுற்று | 0 | 0 | 0 | - | +. |
| மூன்றாம் சுற்று | + | - | + | 0 | - |

நல்லது = +
சராசரி = 0
குறைவு = -

26) முழுப் போட்டியிலும் நன்றாக விளையாடியவர்?

1. கணேஷ்　　2. சேகர்　　3. சமன்

27) போட்டியிலும் கமலிலும் பார்க்க நன்றாக விளையாடியவர்?

1. சமன்　　2. சேகர்　　3. ஹசன்


28) ஒரு தொட்டியின் கொள்ளளவு 10 லீற்றர் ஆகும். ரஞ்சன் ஒரு தடவைக்கு நான்கு லீற்றர் வீதம் இட்டு இத்தொட்டியில் நீரை நிரப்புகின்றார். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவருடைய தம்பி இரண்டு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கின்றனர். ரஞ்சன் எத்தனை தடவை நீரை இட்டபின்னர், முதன்முதலாகத் தொட்டி நிரப்பும்?

1. 4　　2. 3　　3. 6

29) எல்லாத் தோடம்பழங்களும் எலுமிச்சம்பழங்களாகும். வேறு எதுவும் எலுமிச்சம்பழம் அன்று அவ்வாறெனின்,

1. எல்லா எலுமிச்சம்பழங்களும் தோடம்பழங்கள் ஆகும்.
2. சில எலுமிச்சம்பழங்கள் தோடம்பழங்கள் ஆகும்
3. தோடம்பழங்கள் எலுமிச்சம்பழங்கள் அல்ல

30)





இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 4 லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?

1. முடியும்
2. முடியாது
3. விடையளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை

- கோலத்திற்கேற்ப விளக்கங்களின் வெற்றிடத்திற்கு பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க

31)





1. 4　　2. 6　　3. 12



## 10 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்







# காக்கையும் கருநாகமும்

ஒரு பெரிய மரம். அதில் ஆணும் பெண்ணுமாய் இரண்டு காக்கைகள் கூடு கட்டிக்கொண்டு சந்தோஷமாக இருந்தன.

ஒருநாள் அம்மரத்திலிருந்த பொந்துக்கு ஒரு கருநாகம் வந்து சேர்ந்தது. சேர்ந்ததோடு இல்லாமல் காக்கை இடும் முட்டைகளை எல்லாம் ஒவ்வொரு நாளும் காலி செய்து கொண்டு வந்தது.

ஒரு நாளா... இரண்டு நாளா... பலநாள்!

காக்கைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை . கருநாகத்தை காக்கை என்ன செய்ய முடியும்?

அதற்காக விட்டுவிட முடியுமா? விடலாமா?

ஒரு நரியிடம் ஆலோசனை கேட்டது. நரி சரியான யோசனை ஒன்றைச் சொன்னது.

அந்தபுரத்தில் அரசகுமாரி குளிக்கிற இடத்திற்குப் போ. அவள் குளிக்கும்போது நகைகளை கழற்றி ஒரு பக்கம் வைப்பாள். அந்த ஆபரணங்களில் பெரியதான ஒன்றை எடுத்துக்கொள். பலர் பார்க்கும்படி மெல்லப் பறந்து வந்து அவர்களின் எதிரில் அந்த நகையை பாம்பு இருக்கும் பொந்தில் போட்டு விடு. யாரவது பார்க்கும்படி போட வேண்டும்.

போட்டால்...?

போடு முதலில். அப்புறம் பார் என்றது.

காக்கை தாமதிக்கவில்லை. பறந்து அந்தபுரத்திற்குச் சென்று பார்த்தது அரசகுமாரியின் நகைகளில் ஒரு முத்துமாலை அதன் கண்ணை உறுத்தியது. அதையே கொத்தி எடுத்தது.

இருந்த அரசகுமாரியின் சேடிகள் - 'ஆ' காகம் முத்துமாலையைக் கொத்திக்கொண்டு போகுது' என்று கத்தினர்.

உடனே சேவகர்கள் ஓடி வந்தார்கள்.

காக்கை மெதுவாக - அவர்களின் கண்ணில் படும்படி பறந்து வந்தது. அவர்கள் அருகில் வந்து பார்க்கும் படி அந்த முத்துமாலையைப் பாம்பு இருக்கும் பொந்தில் போட்டது.

உடனே சேவகர்கள் தம் கையில் இருந்த ஈட்டிகளால் அந்தப் பொந்தைக் குத்திக் கிளறினார்கள். உள்ளே இருந்த பாம்பு சீறி வெளியே வந்தபோது அதையும் கொன்றார்கள்.

'அப்புறம் பார்' என்று நரியார் சொன்னதன் அர்த்தம் காக்கைக்குப் புரிந்தது. சேவகர்களும் முத்துமாலையை எடுத்துச் சென்றனர்.

சரியான யோசனையால் நிறைவான பலனை அடைந்த காக்கைத் தம்பதிகள் நிம்மதிப் பெருமூச்சி விட்டன.



## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

காலைக்கதிர்



# சீனத் திட்டங்கள் தொடர்பில் தீய நோக்கங்களுக்காக வதந்திகள்



## சீன தூதுவருடனான சந்திப்பில் சபாநாயகர்

கொழும்பு, மே 11

தீய நோக்கங்களுக்காக இலங்கையில் மேற்கொள்ளப்படும் சீனத்திட்டங்கள் தொடர்பில் வதந்திகள் பரப்பப்படுகின்றன என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சீன நிதி வசதியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பற்றி வதந்திகள் பரப்பப்படுகின்றன என்றும் சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீன தூதுவர் செங் சூயுவானைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இருவரும் பொருளாதார உலகமயமாதல் மற்றும் சீனாவின் ஒரு பாதை ஒரு மண்டலம் பற்றி கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

சீனா மற்றும் இலங்கை உட்பட முழு உலகிற்கும் பொருளாதார உலகமயமாதல் பயன் விளைவிக்கும் என சீனத் தூதுவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் சீனத் தூதுவர் மேலும் தெரிவிக்கையில்-

இணைந்த கருத்துப் பரிமாற்றம் பங்கீடு மற்றும் பகிரப்பட்ட நன்மைகள் ஊடாக சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஒரு பாதை ஒரு மண்டலம் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும்.

இலங்கையுடனான உறவை சீனா முக்கியமாகக் கருதுகிறது. இரு நாட்டுத் தலைவர்களும் ஒத்துக்கொண்டதற்கிணங்க ஒரு பாதை ஒரு மண்டலம் திட்டத்தின் மூலம் முதலீடுகளை சீனா மேற்கொள்ளும்.

கொழும்பு துறைமுகத் திட்டம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கைத்தொழில் பூங்கா கொழும்புடன், அம்பாந்தோட்டை மற்றும் கண்டியை இணைத்தல் திட்டம் என்பன மிக வேகமாக வளர்ந்து வருகின்றன என்றும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்தத் திட்டத்தில் ராணுவ தொடர்பு எனும் கருத்தை அவர் மறுத்துரைத்தார். சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் நல்லுறவை சீர்குலைக்கும் சில அந்நிய தீயசக்திகள் செயற்படுகின்றன என்றும் சீனத் தூதுவர் தெரிவித்தார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய இதன்போது சீனாவிற்கு இலங்கை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். சமூகத்தின் அனைத்து தரப்பும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு வர்த்தகத்திட்டம் என்பதை அறியும்.


இலங்கையில் சீனா மேற்கொள்ளும் மெகா திட்டங்களுக்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. இலங்கை நாடாளுமன்றம் அதன் சக்திக்குட்பட்ட வகையில் இத்திட்டங்களுக்கு உதவும் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

# மகளிர் தொழில்துறைக்கான நிதியுதவி வேலைத் திட்டம்!

மகளிர் தொழில்துறைக்கான நிதியுதவி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

மகளிர் தொழில்துறையை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு மகளிர் தொழில்துறை நிதியுதவி வேலைத் திட்டம் என்னும் பெயரிலான கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு உடன்பட்டுள்ள நிதியுதவியை பயன்படுத்தி தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்ட சிறிய மற்றும் மத்தியதர தொழிற் கடன் நடைமுறையின் 2 ஆவது கட்டத்தின் கீழ் இந்த கடன்திட்டத்தை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.




கீழ்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு இதன் கீழ் கடன் உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கடன் தொகையில் நூற்றுக்கு 20 - 30 வரையிலான தொகை மீள செலுத்துவதற்காக அவசியம் ஏற்படாத வகையில் இந்தக் கடன் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# ஊவா மாகாண தாதியர் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே 11

ஊவா மாகாணத்தின் அரச வைத்தியசாலைகளில் அரச தாதியர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று காலை 8 மணிமுதல் 12 மணி வரையில் பணி பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளவரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அரச தாதியர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் அரச சலுகைகள் நேர்த்தியான முறையில் கிடைக்கப் பெறாமை போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்த பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில், வெலிமடை வைத்திய சாலையிலும் இந்தப் பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.



பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டதுடன், வைத்தியசாலையின் வளாகத்தில் தாதியர்கள் பாதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டமொன்றையும் முன்னெடுத்துள்ளனர்.

எனவே இதற்கு அரசு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என குறிப்பிட்டதோடு, அவ்வாறு கிடைக்காத பட்சத்தில் மீண்டும் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட முடிவு செய்துள்ளோம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தாதியர்கள் கூறியுள்ளனர்.

# ஆபாச ஆடையில் சென்ற யுவதி மீது யாழில் தாக்கு!

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணத்தில் குட்டை பாவாடை அணிந்த யுவதியை இளைஞர்கள் கடுமையாக தாக்கியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் பலாலி வீதி, உரும்பிராய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் நண்பகல் வேளையில், யுவதி ஒருவர் மோட்டார் சைக்கிளில் நின்று தொலைபேசியில் உரையாடியுள்ளார். நண்பகல் வேளை என்பதால் சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டுள்ளது.

அப்போது அவ்வழியாக வந்த இரு இளைஞர்கள் குறித்த யுவதிக்கு அருகில் வந்து கையில் இருந்த தொலைபேசியைத் தட்டி விட்டதுடன், குட்டைப் பாவாடை போடுவியா? என கேட்டுத் தாக்கியுள்ளனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிளையும் கீழே தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் வீதியால் சென்ற பொதுமக்கள் யுவதியிடம் நடந்தவற்றை கேட்டு அவரை ஆறுதல் படுத்தியதுடன் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். குறித்த விடயம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் புனர்வாழ்வு மத்திய நிலையம்

கொழும்பு, மே 11

யாழ்.போதனா வைத்தியசாலையின் 3 மாடிக்கட்டடத்தில் புனர்வாழ்வு மத்திய நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்களை வழங்குவதல் தொடர்பில் 3 வருடப் பயிற்சியை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இலங்கையிலுள்ள இயற்கை சுகாதார சேவை மத்திய நிலையமாவதுடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வைத்தியபீடத்தில் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பயிற்சிகளும் இதன் மூலம் வழங்கப்படுகிறது.

2017 இந்த வைத்தியசாலையில் 39ஆயித்து 390 சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 12,486 சத்திர சிகிச்சைக்கு பின்னரான புனர்வாழ்வு பாதுகாப்புக்குத் தேவையான மாற்று சத்திர சிகிச்சைகளாகும்.

புனர்வாழ்வுபாதுகாப்புச்சேவைக்காக இந்த வைத்தியசாலையில் பௌதீக வசதி மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சிகளை மேம்படுத்த வேண்டும் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்காமைவாக யாழ். போதனாவைத்தியசாலையில் 3 மாடி கட்டடத்தில் புனர்வாழ்வு மத்திய நிலையத்தை அமைப்பதற்கும் இதற்கான உபகரணங்களை விநியோகிப்பதற்கும் சம்பந்தப்பட்ட பணியாளர் சபையின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக 3 வருட பயிற்சி வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான உத்ததேசத்திட்டத்தை 60 கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# யாழ்.ஈச்சமோட்டை சன சமூக நிலைய புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், மே 11

ஜே/66 ஈச்சமோட்டை கிராம சேவகர் பிரிவில் உள்ள ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் கிராம சேவகர் எஸ். ரமணன் தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ச.தவசீலன், செயலாளராக கு.விஜய்குமார், பொருளாளராக கே. முருகமூர்த்தி ஆகியோரும் உப தலைவர், உப செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் 08 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தற்போது அமைக்கப்பட்ட நிர்வாகக்குழுவில் உள்ள பலர் முன்னைய காலங்களில் பல செயற்றிட்டங்களை இக்கிராமத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றியவர்கள் என்ற வகையில் ஒரு பலமான நிர்வாகமாக அமையப்பெற்றுள்ளது எனக் கூறப்பட்டது. (இ)

## 3 அமெரிக்கர்களை விடுதலை செய்தது வடகொரியா!

வடகொரியா மூன்று அமெரிக்கர்களை விடுதலை செய்துள்ளது என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வடகொரிய தலைவர்கள் மத்தியிலான பேச்சுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக வட கொரியா சென்றுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ மூன்று அற்புதமான அமெரிக்கர்களுடன் நாடு திரும்புகின்றார் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அவர் நாடு திரும்பும்போது நான் அவர்களை வரவேற்பேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அமெரிக்க பிரஜைகளையே வடகொரியா விடுதலை செய்துள்ளது.

## மலேசியாவில் 61 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சி மாற்றம்;

# உலகின் வயதான பிரதமராக பதவியேற்கும் முகமது மகாதிர்

கோலாலம்பூர், மே 11

மலேசியாவில் 61 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. 92 வயது நிரம்பிய முன்னாள் பிரதமர் மகாதிர் முகமது பிரதமராக பதவியேற்க உள்ளார். மலேசிய நாடாளுமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது.

பிரதமர் நஜீப் ரஜாக்கின் ஆளும் பி.என். கட்சிக்கும், முன்னாள் தலைவர் மகாதிர் முகமது தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. நேற்றுமுன்தினம் வாக்குப் பதிவு நடைபெற்றது. இந்த் தேர்தலில் ஒன்றரை கோடி மக்களில் 69 சதவிகிதம் பேர் வாக்களித்தனர்.

இதையடுத்து, நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையில் ஆளும் பி.என். கட்சி தலைமையிலான கூட்டணியை விட மகாதிர் முகமது தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றியது.

222 உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்றத்தில், 112 இடங்களில் எதிர்க்கட்சி கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. சுதந்திரமடைந்து 61 ஆண்டுகளுக்கு பின், மலேசியாவில் முதன்முறையாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. 9





92 வயது நிரம்பிய மகாதிர் முகமது பிரதமராக பதவியேற்க உள்ளார். இதன் மூலம் உலகிலேயே மிகவும் வயதான பிரதமர் என்ற பெருமையை அவர் பெற உள்ளார். தேர்தல் முடிவுகள் வெளியானமையை அடுத்து கருத்து தெரிவித்த அவர், நாங்கள் பழிவாங்க விரும்பவில்லை என்றும், சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுக்க விரும்புகிறேன் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே மகாதிர் முகமது நேற்று பிரதராக பதவியேற்க உள்ளார் என தெரிவித்திருந்த நிலையில், பதவியேற்பு நேற்று இல்லை என மன்னரின் அரண்மனை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

## அணுசக்தி ஒப்பந்த முறிவால் இந்தியாவுக்கு பாதிப்பு?

ஈரானுடன் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகுவதால் இந்தியாவில் பெற்றோல், டீசல் என்பவற்றின் விலை உயர்வதுடன் அந்த நாட்டுக்கு பண வீக்கம் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது.

இந்தியா அதிகளவான கச்சா எண்ணெய்யை ஈராக், சவூதி அரேபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிடமிருந்தே இறக்குமதி செய்கின்றது.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஈரான் நாட்டுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக ட்ரம்ப் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதனால் இந்தியாவில் பெற்றோல், டீசல் போன்றவற்றின் விலை அதிகரிப்பதுடன் பணவீக்கமும் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

எனினும் ஈரானுடன் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் போவதாக இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## சோமாலியா சந்தையில் வெடிகுண்டு தாக்குதல்

### ஐந்து பேர் உயிரிழப்பு



மொகடிஷு, மே 11

சோமாலியா தலைநகர் மொகடிஷு அருகில் உள்ள சந்தையில் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதலில் 5 பேர் பலியாகியுள்ளனர்.

அல் கைய்தா பயங்கரவாத இயக்கத்தின் ஆதரவாளர்களாக சோமாலியா நாட்டில் இயங்கிவரும் அல்பாப் பயங்கரவாதிகள் அவ்வப்போது வன்முறை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் மொகடிஷு நகரில் உள்ள பிரபல ஓட்டல் அருகே நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 14 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், மொகடிஷு வில் உள்ள வான் லாயென் நகரில் உள்ள சந்தையில் அல்பாப் பயங்கரவாதிகள் வெடி குண்டு தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 5 பேர் பலியாகினர். மேலும், 10 இற்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர் என முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

## இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

இஸ்ரேல் மீது ஈரான் முதல்தடவை எவுகணை தாக்குதலை மேற்கொண்டுள்ளதை தொடர்ந்து மத்திய கிழக்கில் நெருக்கடி தீவிரமடையலாம் என்ற அச்ச நிலை உருவாகியுள்ளது.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய கோலான்குன்றிலுள்ள இஸ்ரேலிய தளங்களை நோக்கி ஈரானிய படையினர் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். சிரியாவிலிருந்தே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஈரான் 20 ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டது என்றும் இவற்றில் பலவற்றை நடுவானில் அழித்துவிட்டோம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து சிரியாவில் உள்ள ஈரானிய தளங்கள் மீது இஸ்ரேல் விமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

சிரியாவில் உள்ள ஈரானிய நிலைகள் மீது எறிகணை தாக்குதலை மேற்கொண்ட பின்னரே இஸ்ரேல் விமானதாக்குதல்களைமேற்கொண்டுள்ளது.

சிரியாவில் இரவு முழுவதும் விமான எதிர்ப்பு பொறிமுறைகள் பயன்படுத்தப்பட்டமையை அவதானிக்க முடிந்தது எனச் சுயாதீன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



## அமெ. ஜனாதிபதி ட்ரம்புடனான சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

### வடகொரியா ஜனாதிபதி சுட்டிக்காட்டு

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடனான சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் தெரிவித்துள்ளார்.

பரம விரோதிகளாக இருந்து வந்த தென்கொரியா – வடகொரியா ஜனாதிபதிகள் பல ஆண்டுகளுக்கு பின்னர் சந்தித்துப் பேசிய உச்சி மாநாடு சமீபத்தில் நடைபெற்றது.

இதற்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் ஆகியோர் நேருக்கு நேர் சந்தித்துப் பேச ஏற் பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த சந்திப்பு நடைபெறும் திகதி மற்றும் இடம் ஆகியவை முடிவு செய்யப்படவில்லை.

இதற்கிடையே, வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் உடனான சந்திப்புக்கான நேரம் மற்றும் இடம் குறித்து மூன்று நாளில் அறிவிப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடனான சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என வடகொரியா அதிபர் கிம் ஜாங் அன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஊடகவியலாளர்களிடம் கூறுகையில்–

இந்தச் சந்திப்பின் மூலம் இரு நாடுகளுக்குமே நல்ல எதிர்காலம் உருவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### இந்தியா முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள

# கர்நாடக சட்டப் பேரவை தேர்தல்; வாக்குப்பதிவு நாளை காலை ஆரம்பம்



பெங்களூர், மே 11

கர்நாடகா சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நாளை காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெறும்.

இதற்கான பிரசாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது. பிரதமர் மோடி, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் இறுதி க்ட்ட பிரசாரத்தில் நேற்றுத் தீவிரமாக ஈடுபட்டனர்.

கர்நாடகாவில் கடந்த 2013 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட முதல்வர் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியின் பதவிக் காலம் எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

புதிய அரசை தேர்வு செய்வதற்கான தேர்தல் ஏற்பாடுகளை தலைமை தேர்தல் ஆணையர் ஓம் பிரகாஷ் ராவத் தலைமையில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த ஏப். 17 ஆம் திகதி தொடங்கி ஏப். 24 ஆம் திகதி வரை நடைபெற்றது.

மொத்தமுள்ள 224 தொகுதிகளில், ஒரு தொகுதி தவிர மற்ற 223 தொகுதிகளில் நாளை சனிக்கிழமை ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. பெங்களூர் ஜெயநகர் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் விஜய்குமார் அண் மையில் காலமானதால் அங்கு தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

223 தொகுதிகளில் பா.ஜ.க. 223 தொகுதிகளிலும், ஆளும் காங்கிரஸ் 222 தொகுதிகளிலும், ம.ஜ.த.–பகுஜன் சமாஜ் கூட்டணி 220 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

இது தவிர மார்க்சிஸ்ட், ஆம் ஆத்மி, இந்திய குடியரசு கட்சி, அதிமுக, சுயேச்சைகள் உட்பட மொத்தமுள்ள 223 தொகுதிகளில் 2654 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

**மும்முனைப் போட்டி**

இந்த தேர்தலில் கர்நாடக முதல்வர் சித்தராமையா சாமுண்டீஸ்வரி மற்றும் பாதாமி ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

ம.ஜ.த. முதல்வர் வேட்பாளர் குமாரசாமி சென்னபட்னா, ராம் நகர் ஆகிய இரு தொகுதிகளிலும் பா.ஜ.க. முதல்வர் வேட்பாளர் ஷிகாரிபுரா தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

5 தொகுதிகள் நீங்கலாகமற்ற 219 இடங்களில் காங்கிரஸ், பா.ஜ.க., மஜத (மதச்சார்பற்ற ஜனதாதளம்) ஆகிய 3 கட்சிகளுக்கு இடையே கடும்போட்டி ஏற்பட்டுள்ளது. இதில் 200 தொகுதிகளில் காங்கிரஸும் பா.ஜ.கவும் நேருக்கு நேர் மோதுகின்றன.

இதனால், பா.ஜ.க. வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா, முதல்வர் வேட்பாளர் எடியூரப்பா, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் மத்திய அமைச்சர் கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல, காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து அதன் தலைவர் ராகுல் காந்தி, ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி, மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனகார்கே, முதல்வர் சித்தராமையா உள்ளிட்டோர் மாநிலம் முழுவதும் சூறாவளி பிரசாரம் மேற்கொண்டனர்.

காங்கிரஸ், பா.ஜ.கவுக்கு ஈடு கொடுக்கும் வகையில் முன்னாள் பிரதமர் தேவகவுடா, ம.ஜ.த. முதல் வர் வேட்பாளர் குமாரசாமி, உத்தரபிரதேச முன்னாள் முதல்வர் மாயாவதி ஆகியோர் அக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிர சாரம் செய்தனர்.

## இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் தலைவர்கள் நேற்றுத் தீவிரம்

இதனிடையே காங்கிரஸ், ம.ஜ.த., மார்க்சிஸ்ட், ஆம் ஆத்மி ஆகிய கட்சிகள் சார்பாக தலா ஒரு தொகுதியில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களை ஆதரித்து தமிழ் அமைப்பினர் பிரசாரம் செய்தனர்.

அ.தி.மு.க. வேட்பாளர் 4 பேர், இந்திய குடியரசு கட்சி 4 பேர் மற்றும் சுயேச்சைகள் உட்பட களமிறங்கியுள்ள 20 இற்கும் மேற்பட்ட தமிழ் வேட்பாளர்களை ஆதரித்தும் பிரசாரம் நடந்தது.

**மோடி - ராகுல் கடும் மோதல்**

கடந்த மே 1 ஆம் திகதி கடைசி கட்ட பிரசாரத்தைத் தொடங்கிய மோடி 5 நாள்களில் 15 கூட்டங்களில் பேசினார். நமோ ஆப் மூலம் 5 இற்கும் மேற்பட்ட கூட்டங்களில் பேசினார். அப்போது காங்கிரஸ், அதன் தலைவர் ராகுல் காந்தி, கர்நாடக முதல்வர் சித்தராமையா ஆகியோரை கடுமையாக விமர்சித்தார்.

இதற்கு பதிலடியாக ராகுல் காந்தியும் சித்தராமையாவும் மோடி, எடியூரப்பா ஆகியோரை கடுமையாக தாக்கி பேசினர். மோடிக்கும் ராகுல் காந்திக்கு மான மோதல் தேர்தல் களத் தில் மட்டுமல்லாமல் டுவிட்டரிலும் அனல் பறந்தது.

**பிரசாரம் ஓய்ந்தது**

தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, கர்நாடகாவில் பகிரங்க பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. கர்நாடகாவில் மொத்தமுள்ள 4.96 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கும் வகை யில் மாநிலம் முழுவதும் 56 ஆயிரத்து 696 வாக்குசாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் வாக்களித்த பின்னர் வாக்காளர்கள் தாங்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில், ஒப்புகைச் சீட்டு வழங்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் பதிவான வாக்குகள் எதிர்வரும் 15 ஆம் திகதி எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படும்.

2019 மக்களவை தேர்தலுக்கான முன்னோட்டமாக, இந்த தேர்தல் கருதப்படுவதால் கர்நாடக தேர்தல் முடிவுகள் இந்தியா முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தென்னிந்திய நதிகள் இணைப்பே என் வாழ்நாள் கனவு - ரஜனிகாந்த்



தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும் என்பதே எனது வாழ்க்கையில் ஒரே கனவு என்று 'காலா' பட இசை வெளியீட்டு விழாவில் நடிகர் ரஜனிகாந்த் தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் நடிப்பில் உருவாகியுள்ள 'காலா' படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த விழாவில் நடிகர் ரஜனிகாந்த் உரையாற்றியவை வருமாறு:-

இது இசை வெளியீட்டுவிழா மாதிரி தெரியவில்லை. படத்தின் வெற்றி விழா மாதிரி இருக்கின்றது. 'சிவாஜி' பட வெற்றி விழாவில் கருணாநிதி கலந்துகொண்டார். 75 ஆண்டுகளாக ஒலித்த அவரது குரல் மீண்டும் கேட்க வேண்டும் என்று கோடிக்கணக்கான மக்கள் காத்திருக்கின்றனர். அதில் நானும் ஒருவன். வெகு சீக்கிரத்தில் அந்தக் குரல் கேட்கும் என்று நம்புகிறேன்.

இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார் தயாரிப்பில் 'லிங்கா' படம் நடித்தேன். அது தண்ணீர் பஞ்சம் பற்றிய படம். இமயமலைக்கு நான் போவதே அங்கு கங்கை நதியைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

கங்கை நதி சில இடங்களில் ரவுத்திரமாகவும், சில இடங்களில் அமைதியாகவும் வரும். அதைப் பார்க்க அற்புதமாக இருக்கும்.


தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும் என்பதே எனது வாழ்க்கையில் ஒரே கனவு. அவற்றை இணைத்து விட்டால், அடுத்த நாளே நான் கண்ணை மூடினாலும் பரவா யில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த விழாவில், லதா ரஜனிகாந்த், படத்தயாரிப்பாளரும் நடிகருமான தனுஷ், அவரது மனைவி ஐஸ்வர்யா, 'காலா' பட இயக்குநர் பா.ரஞ்சித், நடிகர் சங்கத் தலைவர் நாசர், 'காலா' படக் குழுவினர், ரஜனி மக்கள் மன்ற நிர்வாகிகள், ரசிகர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

# தாஜ்மகாலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை

### உச்ச நீதிமன்றம் கண்டனம்

தாஜ்மகாலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க தொல் பொருள் துறை தவறிவிட்டது என்று உச்ச நீதி மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சரியான பராமரிப்பு இல்லாதமையால் தாஜ் மகாலின் நிறம் மாறி வருகின்றது. பூச்சிகள் தொல்லையால் பாதிப்புள்ளது.



எனவே தாஜ்மகாலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கக் கோரி சூழலியலாளர் எம்.சி.மேத்தா என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இவ்வழக்கின் விசாரணை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. தாஜ்மகாலை பாதுகாக்க சர்வதேச நிபுணர்களை நியமிப்பது குறித்து சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் பரிசீலிப்பதாக மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் நட்கர்னி தெரிவித்தார். யமுனை நதியில் நீர் தேங்குவதால் பூச்சிகள் தொல்லை இருக்கின்றன என தொல்பொருள் துறை வழக்கறிஞர் கூறினார்.

அப்போது, "தொல்பொருள் துறை தனது வேலையை செய்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது. தாஜ் மகாலைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க தொல்பொருள் துறை தவறிவிட்டது.

தொல்பொருள் துறை தேவையா, இல்லையா என்று மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்" என்று தெரிவித்த நீதிபதிகள் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# மக்கள் நீதி மய்யத்துக்கு புதிய பொறுப்பாளர்கள்!




மக்கள் நீதி மய்யத்துக்கான புதிய பொறுப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்காணல் சென்னையில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நேர்காணல் இடம்பெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட அரசமைப்புச் சபையின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் நிலவும் மிகமுக்கிய அரசியல், பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளுக்குக் கடந்த 701 ஆண்டுகளுக்கு மேலாக இன்னும் உரிய வகையில் தீர்வுகள் காணப்படவில்லை. இந்தப் பிரச்சினைகள் உரிய வகையில் தீர்க்கப்படும் வரை நாட்டுக்கு மீட்சி இருக்காது. எனவே, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சகலரும் ஒன்றுபட வேண்டும்.

எனினும், குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவும், அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் வடக்கு – கிழக்குப் பிரச்சினை தொடரவேண்டும் என்பதே சிலரின் விருப்பமாக இருக்கின்றது. பிரிக்கப்படாத நாட்டுக்குள், சகல பிரஜைகளும் சமவுரிமையுடன் வாழும் வகையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அரசமைப்பின் ஊடாக உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட அரசமைப்புச் சபையின் செயற்பாடுகள் கடந்த சில நாட்களாக இடம்பெறவில்லை. தேர்தல், கட்சி மாற்றம் உள்ளிட்ட காரணிகளால் இவை நடக்கவில்லை. எனினும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய அதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் 2015 ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசமைப்பு தயாரிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பானது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுவதுடன், சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் என்பதே அவருடைய நிலைப்பாடாக உள்ளது. இதனால்தான் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் இந்த அரசமைப்பு மறுசீரமைப்புப் பணிகளை எதிர்க்கமுடியாதுள்ளது. இந்த நிலைப்பாட்டிலேயே நாங்களும் இருக்கின்றோம்.

கடந்த 30 வருடங்களாகப் புதிய அரசமைப்புத் தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் தொடர்ந்தும் வருகின்றன.

பிளவுபடாத, பிரிக்க முடியாத நாட்டுக்கள் தமிழ் மக்களும் சமமான பிரஜைகளாக வாழக்கூடிய வகையிலான தீர்வொன்றையே எதிர்பார்க்கின்றோம். இது புதிய அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட வேண்டும். இதனை எவரும் மறுக்க முடியாது. ஏனைய நாடுகள் முன்னேறிச் செல்வதற்கு அரசமைப்புக்கள் உதவியதைப் போன்று எமது நாட்டுக்கும் புதிய அரசமைப்பு தயாரிக்கப்படவேண்டியது கட்டாயம். – என்றார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழைப்பையும் வழங்கக் கூட்டமைப்பு தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி ஆற்றிய கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் தேசிய அரசை அமைத்து, அதிலே முக்கியமான ஒரு விடயமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் புதிய அரசமைப்புத் தயாரிப்புப் பணிகள் பற்றி ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிடாதமை ஏமாற்றத்தை அளிக்கிறது. ஜனாதிபதி தனது உரையில் இதனைக் குறிப்பிடாததால் தோற்றுப்போன விடயமாகவோ அல்லது இனி நடைபெறாதோ என்று எவரும் அதனைக் கைவிடமுடியாது. ஏனெனில் அது ஒருதனி மனித அபிலாஷை மட்டுமல்ல. அவருடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்று மக்கள் அவருக்கு வழங்கிய ஆணையாகும்.

அது மாத்திரமன்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசமைப்பு தயாரிக்கப்படும் என உறுதி வழங்கியிருந்தார். இதன் அடிப்படையில் பார்க்கும்போது நாட்டில் உள்ள 90 வீதமானவர்கள் புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கு ஆணை வழங்கியுள்ளனர். இந்த நாடாளுமன்றத்தில் உள்ள சகலரும் இணைந்து ஏகமனதாக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றியுள்ளோம். அது மாத்திரமன்றி அரசமைப்பு மறுசீரமைப்புச் செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்ற பிரேரணையும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி தனது உரையில் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டாத காரணத்தால் இவற்றை அரசு கைவிட்டுவிட்டதாக நாங்கள் கருதப்போவதில்லை.

அனைத்து மக்களும் சேர்ந்த செய்கின்ற பிரதானமான பணியைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். ஜனாதிபதி இந்த ஆணையைப்பெற்றவாரக இருப்பதுடன், அவருக்கு எஞ்சியிருக்கும் சொற்ப காலத்தில் இதற்குத் தலைமை தாங்க வேண்டும். அந்தக் கடமையிலிருந்து அவர் தவற முடியாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவோம். அரசு இதனைச் செய்து முடிக்கத் தயங்கினால் அதற்கான முழு அழுத்தங்களையும் பிரயோகிப்போம்.

அரசியல் தீர்வு என்பது தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி சகலருக்கும் அவசியமானது. புதிய சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே சகலரும் ஒன்றுமையாக வாழ முடியும். இதனைப் புறந்தள்ளினால் வேறு பிரதிபலன்கள் நாட்டில் ஏற்படலாம். சகல இனங்களின் சுபீட்சத்துக்கும் புதிய அரசமைப்பே அவசியமானது.

கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிடாமல் விட்டமை பாரிய குறைபாடாக இருந்தாலும் அந்த செயற்பாடு நடக்கவேண்டும். நடக்க வைப்போம். – என்றார். (ஐ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில், நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்ற ஊடகவியலாளர்கள் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்டவர்களைக் கைது செய்ய அரசு தாமதிப்பது தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷவின் ஆட்சியிலும் கோட்டாபய ராஜபக்ஷவின் தவறுகளை நாம் சுட்டிகாட்டினோம். ஆனால் அன்று எதனையும் செய்ய முடியவில்லை. இன்றும் அவரைக் கைது செய்ய முடியாதுள்ளது. அதுவே இலங்கையின் நீதித்துறையின் தன்மை. இந்நிலையில், அவர் கைது செய்யப்படாதிருப்பதற்கான காரணம் எனக்கும் புரியாதுள்ளது. இவை தொடர்பில் கேட்டால் என்னைத் தூற்றுகின்றனர்.

மிக் விமானக் கொடுக்கல் வாங்கலில் பல பில்லியன் ரூபா பணத்தை அரசு இழந்துள்ளது. இதற்குக் காரணமான உதயங்க வீரதுங்கவைக் கைது செய்யவும் இரண்டு ஆண்டுகள் சென்றன. அதேபோல் முறிகள் விவகாரத்தில் இழக்கப்பட்ட முழுமையான பணத்தை நாம் மீளப் பெறுவது உறுதி. – என்றார். (ஐ)

## மண்ணெண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருந்த சுப்பர் டீசல் 9 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 119 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

44 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 101 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் எரிபொருள்களின் விலைகள் கடுமையாக உயர்ந்திருந்தன. நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் அவற்றை வெகுவாகக் குறைத்தது. இதனால் நாட்டு மக்கள் பெரிதும் நன்மையடைந்தனர்.

இந்நிலையில் தற்போது நலாட்சி அரசும் எரிபொருள்களின் விலையைத் திடீரெனக் கடுமையாக உயர்த்தியுள்ளது. அதுவும் மண்ணெண்ணெயின் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 2 மாதங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் எரிபொருள்களின் விலை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றமடையும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றத்துக்கு ஏற்ப எரிபொருள் விலைச்சூத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கும் அல்லது குறைவடையும் என அவர் தனது கீச்சகத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## மே - 18...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனந்தி சசிதரன் இந்தப் பிரகடனத்துக்கான பிரேரணையைச் சபைக்குக் கொண்டு வந்தார்.

மே – 18ஆம் திகதியை முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நாளாகவும், தமிழ்தேசிய இனத்தின் துக்க நாளாகவும் வடக்கு மாகாணசபை பிரகடனப் படுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பிரேரணையை மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரம் வழி மொழிந்தார். இதனைத் தொடர்ந்து சபையில் எந்த எதிர்ப்பும் இல்லாமல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை,

இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரும் தமிழினப் படுகொலை நாளான மே மாதம் 18ஆம் திகதியை அனைத்து மக்களும் அமைதியாக உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

மே மாதம் 18 ஆம் திகதியை வடக்கு மாகாண சபை தேசிய துக்க தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. எனவே அன்றைய நாளை அனைத்து தமிழ் மக்களும் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கவேண்டும்.

ஒவ்வொருவரும் அன்றைய நாளில் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டும், களியாட்ட நிகழ்வுகளைத் தவிர்த்தும் உணர்வுபூர்வமாகவும் அமைதியாகவும் அனுஸ்டிக்க வேண்டும். –என்றார். (ஐ–7)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இனப்பிரச்சினைக்கான தீர்வு இனியும் இழுத்தடிக்கப்படக் கூடாது. இந்நிலை நீடித்தால் அடுத்த தேர்தலில் அரசியல் கட்சிகள் கூறுகின்றவற்றுக்கு மக்கள் செவி சாய்க்க மாட்டார்கள்.

அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்டும் வகையிலான ஜனாதிபதியின் கொள்கை விளக்கப் பேருரை ஏமாற்றமளித்துள்ளது. தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் தொடர்பிலும், சமவுரிமை, கலாசாரம் தொடர்பிலும் ஓரிரு நிமிடங்கள் பேசப்பட்டபோதிலும், அவற்றை அடைவதற்கான அணுகுமுறைகள், வழிமுறைகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

இதேவேளை, 85 சதவீதக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கூறினாலும் அதை முழுமையாக ஏற்கமுடியாது. வடக்கு – கிழக்கில் இன்னும் விடுவிக்கப்படாமல் காணிகள் இருக்கின்றன. – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. இங்குள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களில் அமைப்பதற்கு 866 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கில் பொதுமக்களின் காணிகளிலுள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களில் அமைப்பதற்குச் செலவாகும் நிதியை இராணுவத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தனியார் காணிகளில் 522 ஏக்கரை விடுவிப்பதற்கு இராணுவம் இணக்கம் வெளியிட்டுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தனியார் காணிகளை விடுவிக்கும்போது அவற்றில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களை வேறு இடத்தில் மீள அமைப்பதற்கு 866.71 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டிருந்தது. இத்தொகையைப் பெற்றுக் கொடுப்பதற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. – என்றார். (ஐ)

## தந்தையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுடைய ஒரேயொரு மகள் உயிரிழந்துள்ளார். சுகந்தன் துசாந்தினி (வயது–5) என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காலையில் வீட்டிலிருந்து ஆடைத் தொழிற்சாலைக்குப் பணியாளர்களை ஏற்றிச் செல்லும் தந்தை தனது மகளையும் முன்பள்ளிக்குக் கொண்டு சென்று இறக்கிவிடுவது வழக்கம்.

அவ்வாறே நேற்று முன்தினம் புதன்கிழமையும் காலை வீட்டிருந்து வானில் மகளை ஏற்றிக்கொண்டு சென்ற தந்தை முன்பள்ளியில் மகளை இறக்கி விட்டுவிட்டு வாகனத்தைத் திருப்பியுள்ளார். இதன்போது வழமைக்கு மாறாக மகள் வாகனத்தின் முன் பக்கத்தால் பாடசாலைக்குச் செல்வதற்கு எத்தனித்தபோது வாகனத்துடன் மோதுண்டுள்ளார்.

உடனடியாகத் தந்தை படுகாயமுற்ற மகளைச் செட்டிக்குளம் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அங்கிருந்து அவசரமாக வவுனியா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார். அங்கு அவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் அறுவைச் சிகிச்சையும் மேற் கொள்ளப்பட்டது. இருந்தும் வைத்தியர்களால் சிறுமியின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. சிறுமி நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இறந்த சிறுமி அவர்களின் ஒரேயொரு மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் அந்தப் பிரதேசத்தைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஹாலெப் வெற்றி



மட்ரிட் பகிரங்க ரென்னிஸ் போட்டியில் உலகின் முதல்நிலை வீராங்கனை சிமோனா ஹாலெப் இரண்டாம் சுற்றில் வெற்றிப் பெற்றுள்ளார்.

ஸ்பெயினில் நடைபெற்று வரும், மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு போட்டிகள் சில கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் ருமேனியாவின் சிமோனா ஹாலெப் மற்றும் பெல்ஜியத்தின் எலிசே மெர்டென்ஸ் ஆகியோர் மோதிய போட்டி ரசிகர்களிடையே பலத்த வரவேற்பை பெற்றிருந்தது.

ரசிகர்களின் எதிர்பார்ப்புடன் ஆரம்பமான போட்டி ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்றதுடன், இறுதியில் சிமோனா ஹாலெப் வெற்றியைப் பதிவு செய்தார். சிமோனா ஹாலெப் 6-0, 6-3 என்ற நேர்செட்டில் பெல்ஜியம் வீராங்கனை எலிசே மெர் டென்ஸ்ஸை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இதன்படி மூன்றாவது சுற்றிலும் ஹாலெப் வெற்றிப் பெற்றால் மெட்ரீட் தொடரில் ஹெட்ரீக் வெற்றியை பெற்றவராக சிமோனா ஹாலெப் கருதப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜூன் 27 இரண்டு இடங்களில் இருக்க வேண்டிய கோஹ்லி

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராத் கோஹ்லி, அடுத்த மாதம் 27ஆம் திகதி ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

ஸ்கார்பரோவில் அடுத்த மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள யோர்க்ஷயர் அணிக்கெதிரான போட்டி வரைக்கும் ஜூன் மாதம் முழுவதும் சரே அணிக்காக விராட் கோஹ்லி விளையாடுவார் என சரே அணியின் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

இந்நிலையில், அடுத்த மாதம் 27ஆம்,



29ஆம் திகதி இடம்பெறவுள்ள அயர்லாந்துக்கெதிரான 20/20 சர்வதேசப் போட்டிகளுக்கான இந்திய அணியின் தலைவராக விராட் கோஹ்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டிகளுக்கானதும் இங்கிலாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட 20/20 சர்வதேசப் போட்டிக்கான குழாமில் சிதார்த் கோல், உமேஷ் யாதவ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். எவ்வாறெனினும் நடப்பு இந்தியன் பிறீமியர் லீக்கில் பிரகாசித்த அம்பதி ராயுடு, ஷ்ரேயாஸ் ஐயர், குருனால் பாண்டியா, றிப்பண்ட் ஆகியோர் இக்குழாமில் இடம்பெறவில்லை.



# கிண்ணத்தை தனதாக்கியது வவுனியா இந்துக் கல்லூரி

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வவுனியா இந்துக்கல்லூரிப் பெண்கள் அணியும் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி பெண்கள் அணியும் மோதின. அதில் வவுனியா இந்துக்கல்லூரி அணி வெற்றிபெற்றது.

முதல் இன்னிங்ஸில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சித்தி விநாயகர் சார்பாக முகமட் ஜல்லா 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் வவுனியா இந்துக்கல்லூரியின் தினோசிகா 8 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த வவுனியா இந்துக்கல்லூரி அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

அதனை தொடர்ந்து 27 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய சித்தி விநாயகர் அணி 5 விக்கட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. குறித்த போட்டி சமநிலையில் முடிவடைந்தாலும் முதல் இன்னிங்ஸில் சித்திவிநாயகர் அணியை விட அதிக ஓட்டங்களைக் குவித்த வவுனியா இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.



# தலைக்கனம் வந்தால் சகலதும் போய்விடும்

தலைவர் என்றாலும் அவரும் ஒரு வீரரே, தலைக்கனத்துடன் செயற்பட்டால் வெற்றி கிட்டாது என ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணித் தலைவர் வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் 11 ஆவது ஐ.பி.எல் தொடரில் சிறப்பாக விளையாடிவரும் ஹைதராபாத் அணி 10 போட்டிகளில் இரண்டில் மட்டுமே தோல்வியடைந்து 8 வெற்றிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



மேலும், போட்டிக் களத்தில் தலைவர் என்ற எண்ணம் இருக்கக் கூடாது தலைவரும் ஒரு சக வீரர் மட்டுமே எனக் குறிப்பிட்ட வில்லியம்சன், தலைவரும் ஏனைய வீரர்களுடன் இணைந்து வெற்றிக்காகப் போராட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தலைவர் பொறுப்பில் இருக்கின்றோம் என்பதை மறந்து ஒரு வீரராக நினைத்துச் செயற்பட்டால் மாத்திரமே சாதிக்க முடியும் எனவும் வில்லியம்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீரர்களிடம் பாரபட்சம் காட்டக்கூடாது சரியான தருணங்களில் சரியான வீரர்களைப் பயன்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்ட வில்லியம்சன், தலைவர் தலைக்கனத்துடன் செயற்பட்டால் எல்லாம் போய்விடும் எனவும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோஹ்லியின் முடிவால் வேதனையில் கிளார்க்



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியை இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி ஒதுக்கியுள்ள விடயமானது தனக்கு வேதனையையும், ஆச்சரியத்தையும் அளித்துள்ளதாக ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொல்கத்தாவில் நடந்த நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது வரலாற்று சிறப்புமிக்க போட்டியை விராட் உதறியிருக்கின்றார் இது ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். யாருடன் விளையாடுகின்றோம் என்பது முக்கியமல்ல டெஸ்ட் போட்டிக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய கிளார்க், ஆஸ்திரேலிய டெஸ்ட் போட்டியிலும் கோஹ்லி விளையாட வேண்டும் என்பது எனது விருப்பம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் கோஹ்லி தனது காலஅட்டவணையில் மாற்றங்களைச் செய்ய முடியும் என்றால் அவரால் இந்தப் போட்டிகளில் விளையாட முடியும் எனவும் கிளார்க் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று
Rajasthan Royals v Chennai Super Kings
11.05.2018
இரவு 8.00 மணி

# மட்ரிட் பகிரங்க ரென்னிஸ் நொவேக்கை வீழ்த்திய கைல்

மட்ரிட் பகிரங்க ரென்னிஸ் போட்டித்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் நொவேக் ஜோகோவிச் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியுள்ளார்.



ஸ்பெயினில் நடைபெற்று வரும் மெட்ரீட் பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று போட்டிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன.

அதில் முக்கியம் வாய்ந்த போட்டியாக முன்னாள், உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவேக் இங்கிலாந்து வீரர் கைல் எட்முன்னுடன் பலப்பரீட்சையில் ஈடுபட்டார். இருவரும் சமபலத்தில் மோதிக் கொண்டதால் போட்டியின் விறுவிறுப்பு அதிகரித்தது. இறுதியில் 3-6, 6-2, 3-6 என்ற செட் கணக்கில் ஜோகோவிக்கை வீழ்த்தி கைல் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

# மாகாண சபை எதுவும் செய்யவில்லை என்று கூறுவது போக்கிலித்தனமானது

## சபையில் அவைத் தலைவர் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 11

முதலாவது வடக்கு மாகாண சபையின் காலம் முடிவடையவுள்ள நிலையில், மாகாண சபை எதுவுவே செய்யவில்லை என்று சபையில் கூறுவது போக்கிலித்தனமானது எனத்தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவைத் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண சபையில் உள்ள எமக்குள் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மக்களுக்கான செயற்பாடுகளின்போது நாம் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டும். இந்தச் சபையில் பல சவால்களுக்கு மத்தியிலும் நாம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அவ்வாறு நாம் மக்களுக்காகப் பலவற்றைச் செய்து வருகின்றபோது மாகாண சபை ஏதுமே செய்யவில்லை என்றும் ஒரு சிலர் சொல்கின்றனர். அவ்வாறு அவர்கள் எதற்காக – எதனடிப்படையில் – கூறுகின்றார்களோ தெரியவில்லை. ஆகவே நாம் செய்தவற்றை அல்லது செய்துகொண்டிருப்பவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் செய்தவற்றைச் செய்ததாகவே கூறவேண்டுமே தவிர ஏதுமே செய்யவில்லை என்றும் சொல்லக்கூடாது. இதனை விடுத்து மாகாண சபை எதுவுமே செய்யவில்லை என்று இந்தச் சபையில் கூறுவது போக்கிலித்தனமானது.

முதலாவது வடக்கு மாகாண சபையின் காலம் முடிவடைவதற்கு இன்னும் சில மாதங்கள் உள்ள நிலையில் நாம் தொடர்ந்தும் மக்களுக்கான எமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். ஆகவே நாம் எல்லொரும் இணைந்து மக்களுக்கான எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் – என்றார். (ஐ–7)

# அர்ஜூன், கசுன் பலிசேன தொடர்ந்தும் மறியலில்

கொழும்பு, மே 11

பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் இம்மாதம் 24ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி விநியோக மோசடி தொடர்பில் பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## கந்தையா கணேஷ்

முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அமரர் கந்தையா கணேஷ் அவர்கள் காலமானமையையிட்டு யாழ். வணிகர் கழகம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சிறந்த நிர்வாகியான அமரர் கணேஷ் அவர்கள் 01.01.2005 - 13.07.2010 வரையிலான காலப்பகுதியில் - போர் உச்சக்கட்டத்தை அடைந்த மிக மிக இக்கட்டான காலத்தில் - யாழ். குடாநாட்டின் போக்குவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலையில் - ஆற்றிய சேவைகள் சொல்லிடங்காதவை. அமரர் கணேஷ், போர் சூழலிலே மக்களுக்குக் கிடைத்த கொடை என்றே நாம் கூறவேண்டும். இக்காலகட்டத்தில் மக்களைப் பாதுகாத்து மக்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளைத் தமது சிறந்த நிர்வாகத்திறைமையின் மூலம் கையாண்டு மக்களைப் பட்டினியில் இருந்து காப்பாற்றியமையுடன், இயன்றளவு மக்களுக்கு உயிரிழப்பு ஏற்படாது பாதுகாத்தவர். போர் காரணமாக யாழ். குடாநாட்டை நோக்கி வந்த பெருந்தொகையான அகதி மக்களை 11 முகாம்களில் வைத்துப் பராமரித்து, அவர்களுக்குத் தேவையான அடிப்படை அத்தியாவசிய உதவிகளை வழங்கி, அந்த மக்களுக்கு ஆறுதல் அளித்த பெருந்தகையாவார். அந்த வேளையிலே அவருடன் இணைந்து அம்மக்களுக்கு யாழ். வணிகர் கழகமும் அத்தியாவசியத் தேவைகளை வழங்கிப் பங்களிப்பு வழங்கியதுடன், அவருடன் இணைந்து நாம் பணியாற்றியமையைப் பெரும் பாக்கியமாகவும் கருதுகின்றோம்.

"அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்."

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். வணிகர் கழகம்.

# மரண அறிவித்தல்



பிறப்பு:
28.09.1942

இறப்பு:
10.05.2018

## அமரர் கந்தையா கணேஷ்

(முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்)

யாழ்.பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு சொய்சாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணேஷ் அவர்கள் நேற்று (10.05.2018) வியாழக்கிழமை அதிகாலை யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து வல்லிபுரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வேலாயுதம், காலஞ்சென்ற வேலும்மயிலும், கண்மணி, சுந்தரவதனா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அம்பலவாணர், திருச்செல்வம், காலஞ்சென்ற ஜெயதேவி, தவதேவி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி கணபதிப்பிள்ளை மற்றும் இரத்தினம், சிவப்பிரகாசம், சரஸ்வதி மற்றும் பாலசிங்கம், யோகம்மா, நவரட்ணம், லக்ஷ்மி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனரும், வேல்தாஸ், மகிழினி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாரும், அபர்ணா, அமுதா, அங்கயன், ராஜ்குமார், மைதிலி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகி பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு அன்னாரது உடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கௌரிசங்கர்பதி",
கிழவிதோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
0776660562

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 6728 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.